புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

(1889)

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | ரூ. | 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, ரூ. | 9-40 |
| கொலோவாய்ப்பகுதி: | ,, ரூ. | 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:—ஒருகலம் | | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | காற்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி. விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கஎ } யாழ்ப்பாணம்:—குரோதனஹு ஆடிமீ கஉ; (1925 ஜூலாய் 30) வியாழக்கிழமை. { இலக்கம்—கூ.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்'

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தேசப்பெரியார்கள்
அநேகர் விரும்பி உபயோகிக்கும்
சமையல் அடுக்கு
**ருக்மணிகுக்கர்தான்.**

கனம் எட்டியாபுரம், ராஜா, டாக்டர் வாதராஜலுநாயுடு முதலிய அநேக கனவான்களால் நன்குமதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒருமணிக்குள் கஷ்டமில்லாமல் சாதம் 4, 5 பதார்த்த வகைகள் செய்யலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அளவு | ஒருவர் | 2 | 4 | 6 | 8 பேர். |
| விலை | ரூபா | 13. | 18 | 22 | 27 33. |

விபர புத்தகம் இனாம். ஏஜண்டுகள் தேவை.
இன்றே ஒரு குக்கர் வாங்குங்கள்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
(Y. 45.) இராயபுரம், மதராஸ்.

**Hakeem, M. Mohamed Ebraheem & Co;**
HAMEETHIA AYURVEDIC UNANI
MEDICAL HALL.
POTO-NOvO (South India)

## அருமைத் துரைகளே! பொறுமையாய்க் கவனியுங்கள்!

இழந்துபோன பலத்தையும், கலத்தையும், நரம்புத் திடத்தையும்
அதி அற்புத ஆச்சரியமான சுக சக்தியையும் இது
உபயோகித்த ஒரே வேளையில் தெரிந்துகொள்ளலாம்.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிக் கடிதங்களும்
தங்க மெடல்களும் பரிசு பெற்ற
மதன மோஹன

## சிட்டுக் குருவிச் சத்தின் லேகியம்.

அசல் பாகம்! ——o—— அருமையானது!!

பரிக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதமுள்ளது. இந்தப் பாகம் சரியாக வேறு எந்தக் கம்பெனியார்களும் செய்து காட்டினாலும் அல்லது இது நாங்கள் உண்மையான பாகப்பிரகாரம் சரியாக செய்யவில்லை என்று ருஜூவித்தாலும் சரியே அவர்களுக்கு எங்கள் கம்பெனியால் ரூபா 1000 இனாம் கொடுக்கப்படும்.

### அன்பின் மிக்குள நண்ப சிகாமணிகளே!

அருமையும், அனுபவமும், பெருமையும், பிரபல்யமும், மஹா அற்புத ஆச்சரிய சக்திகளும் வாய்ந்த இந்த அசல் "முபர்ரு" லேகியத்தை உபயோகிக்கும் உத்தமர்கள் இல்வாழ்க்கையிலே நாம் என்றுங் கண்டிராத சித்தானந்த கெம்பீர சிற்சுகவிலாச நலன்களையும், சில அற்புத குணங்களையும் தெரிந்துகொள்வார்கள். ஆஹா! குணத்தால் சிறந்த இந்திரலோகத்திய "மகாசஞ்சீவினி" இதுதானோ? என்றும் பன்முறையும் புகழ்வார்கள். ஆனைப் பிறந்து இவ்வுலகத்தில் வளர்ந்து இளம் பால்யப் பருவத்திலேயே குருநோய்வாய்ப்பட்டுக் கெட்டும், இன்னும் பலவித காரணங்களினாலும் தேஹத்திற்கு சத்காரணமாகிய நல்லிரத்தத்தை வீண்விரயஞ்செய்தும், நல்ல வாலிபப் பருவத்தில் வாத பித்த சிலேற்பன பிருதிக் குறைவாலும், எலும்புருக்கி முதலான வெப்புரோகங்களினாலும் ஜீவரத்ன பீடமாகிய தேகம் தளரப்பெற்றவர்களும், சித்திராபங்கம் என்னும் ஓர்வித கொடிய நோயினால் எப்பொழுதுஞ் சஞ்சலப்பட்டுக்கொண்டிருப்பவர்களும், சரம் பிரமேகம் வெளுப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தம் கரைந்து சர்வ நாம்டிகளுந் தளர்ந்து ஐம்புலன்களின் உற்சாகமும் குறைந்து, ஞாபகசக்திக் குறைவு, கை கால் அசதி, தேஹாங்கை, இடுப்புவலி, பசிமந்தம், மலச்சிக்கல் முதலிய வியாதிகளால் சதா வருந்துவோரும்,

மனோ தத்வ புத்திசாதுர்யத்தைக் கொண்டு வேலைசெய்யக்கூடிய லாயர்கள், குமாஸ்தாக்கள், பாடலீகர்களும், மற்றும் ஞாபகசக்தியால் வேலையையுடைய, எந்தத் தொழிலாளர்களும் இதனை உபயோகித்தால் நல்ல உற்சாகமும், சந்தோஷமும் அடைவார்கள். திடமான தேஹக் கட்டுப்பாட்டையும், புதிய மேனியையும், இரத்தவிர்த்தி ஞாபகவிர்த்தி சந்தானவிர்த்தி முதலிய சர்வ நலன்களையும் பெறுவார்கள். தாருட்யசக்தியின் குறைபாட்டினால் ஏற்பட்ட பலவிதமான நோய்களினாலும், பீடிக்கப்பட்டு இரவும் பகலும் அதுவே கவலையிலானவர்களுக்கு திட்டமாக குணம் செய்வதில் இது மகா வல்லமையும் பேரும் பிரகீர்த்தியும் பெற்றது. இதனை பரிக்ஷிக்கும் ஒவ்வொரு நண்பர்களுக்கும் தப்பாமல் குணம்செய்யும். சத்தியமான சித்தானந்த யோகபாகம் இதுதான் என்று நாம் சொல்லவேண்டியதில்லை. பலனும் கலனும் சில அற்புத ஆச்சரிய வல்லமைக் குணங்களும் ஒரே வேளையில் தெரியும். கண்டாலே தெரியும் காக்ஷி! தின்றாலே தெரியும் திடன்!! இத்தகைய குணங்கள் இதில் இல்லையென்று சத்தியமாகச் சொல்லுகிறவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபா 1000 இனாம் கொடுக்கப்படும். பரிக்ஷை செய்யவும். உபயோக விபரம் கூடவே வரும்.

அன்பர்களுக்கோர் அறிவிப்பு:—

இக்காலத்தில் சில போலி வைத்தியர்கள் கிளம்பி பலவித இமிட்டேஷன் லேகியங்களையே சிட்டுக்குருவி லேகியமென்று விற்று வருகிறார்கள். ஆகையால் அத்தகைய லேகியங்களைத் தருவித்து மோசம்போய்விடாமல் நமது விலாசத்தைக் கவனித்து எழுதவேண்டியது. ஷை முழுபாகம் தருவிப்பவர்களுக்கு உசித இரசமணி 1 இனாம்.

| | |
|---|---|
| 40 நாள் மருந்து 16 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 10—0—0 |
| 20 நாள் மருந்து 8 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 5—0—0 |
| பரிக்ஷைக்கு 10 நாள் மருந்து 4 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 3—0—0 |

வி. பி. தபால்செலவு முதலியன முழுபாகத்திற்கு அணா 12ம், அரைபாகத்திற்கு அணா 7ம், கால்பாகத்திற்கு அணா 5ம் பிரத்தியேகம். மருந்தின் கிரயத்தை முன்பணமாக அனுப்புவோர்களுக்கு போஸ்டிங் சார்ஜ் இனாம்.

கவனிப்பு:—பினாங்கு, சிங்கப்பூர், குவாலாலம்பூர், செட்டால், மோரீஸ் முதலிய வெளிப்பிர தேசங்களில் உள்ளவர்கள் மருந்தின் கிரயமும், தபால் செலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணமாக மணியாடர் அல்லது போஸ்டல் ஆர்டராக அனுப்பியே மருந்து பெறவேண்டும். நமது விலாசம்:—

ஹக்கீம், எம். முஹம்மது இபுறுஹீம் அண்ட் கம்பெனி,
மானேஜர், ஏ. முகம்மது யூசுபு,
ஹமீதியா ஆயுர்வேத. யூநானி வைத்தியசாலை,
(Q. 63). பறங்கிப்பேட்டை (தென்னிந்தியா).

[ESTABLISHED 1609]
**MESSRS. A. S. M. A. KHADER BROTHERS**
**Kairul Muslimeen Medical Hall**
**PORTONOVO** (*SouthArcotDistrict*).

## ஏ ஜ ண் டு தே வை.

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கோள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.
அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனாமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது
உ த் த ர வா த மு ள் ள து.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்த வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய கலன்களை அடையக்கூடியதுமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

### லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம பிருதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகைத்தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டை சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்ச்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்த்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதா இடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஒடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனே நடன் அறியவேண்டியதென்றே ஜனனுக [illegible] மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபாற் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபாற்செலவு இனாம். பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசிகள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜூ ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது ஷைகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ருபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயமும் ரூபா 1000 இனாமாயும் கொடுக்கப்படும். அப்படி ருபித்தும் இனாமுடையபணமும் கிரயமும் கொடுபடா விட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரியகுணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தைச் செய்து காட்டினாலாவதுமுன் கண்ட இனாம் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

TEL. ADDRESS:—
Khader Bros.
Porto Novo.
(Y. 38).

என்மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

# அதிசிரேஷ்டமான தைலம்.

காரகண்டிப்பான மனுஷனோ ஸ்திரீயோ சரியென மதிக்கும்படியான அநேக முக்கிய சரக்குகள் சேர்ந்த தைலம்

## லிட்டில்ஸ் ஓரியன்றல் பாம்.

இதர தைலங்களைவிட இது ஏன் சிரேஷ்டம்?

1. நோவைக் குணமாக்கும் 12 திவ்விய சரக்குகள் சேர்ந்தது.
2. அவைகளின் சாரத்தை அது தன் திட—திராவ மூல காரணத்திலடக்கி வைத்திருக்கிறது.
3. அதில் வீணுப்போகும் தன்மையே கிடையாது. தினையளவு தைலம் பனையளவு குணத்தைத் தரும்.
4. அதில் அன்னியபொருள் சேர்ப்பில்லை.
5. அதில் மிருகக்கொழுப்பேயில்லை.
6. அது குணஞ்செய்யும்.

குணமுடையது

3—ட—25.




(Y. 41. A.)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— குரோதன ஞு
ஆடிமீ உக உ வியாழக்கிழமை.



## வடமாகாணப் பரிபாலன அறிக்கைப் பத்திரம். 1924—உ

யாழ்ப்பாணப் பிரிவின் சுகாதாரத்தைச் சொல்லுமிடத்து, சென்ற வருடத்தில் 1000 பேருக்கு 27 பேர் விகிதம் இறந்திருக்கின்றனர். 38 பேர் விகிதம் பிறந்திருக்கின்றனர். மன்னார்ப்பிரிவில் மாத்திரம் மரணமானோர் தொகை 1257 பேர். பிறந்தவர் தொகை 852. மன்னார் முல்லைத்தீவு என்னுமிரு பகுதிகளிலும் ஒருவயசிற்குட்பட்ட சிறு குழந்தைகள் பலர் மாண்டுள்ளனர். காட்டுக்காய்ச்சலால் இந்த ஊர்களில் நேர்ந்த மரணமும் அதிகமாகும். சென்ற வருடத்தில் நோயாளிகளுள் நூற்றுக்கு 60 விகிதமானோர் காட்டுக்காய்ச்சலாற் பீடிக்கப்பட்டவர்களாவர். 1923-ம் ஆண்டிலும் பார்க்க 24-ம் ஆண்டில் 7308 பேர் கூடிய தொகையினர் அரசாங்க வைத்தியசாலைகள் வாயிலாகச் சிகிச்சைசெய்யப்பட்டிருக்கின்றனர். இங்ஙனம் கூடிய தொகையினர் அரசாங்க வைத்தியசாலைகட்குச் சென்று வைத்தியஞ் செய்வித்தற்குக் காரணம் இக்காலத்தில் இங்குள்ளாரனேகர் மேலைத்தேச வைத்தியத்தி னருமையை யறிந்து அதனைக் கைக்கொள்ளத் தொடங்கியமையேயென நமது வடமாகாணத் தலைவர் தமது அறிக்கைப்பத்திரத்தில் வெளியிடுகின்றனர் இவ்விஷயமாக நமது மாகாணத் தலைவர் கொண்டுள்ள அபிப்பிராயந் தவறுடைமென்றே சொல்லல் வேண்டும். "குவினின்" எனப்படும் மருந்தினாற் காட்டுக்காய்ச்சலை முறித்துக்கொண்டு நோயாளிகளா யுள்ளவர்கள் பின்னர் இங்குள்ள ஆயுர்வேத வைத்தியர்களை யடைந்து அவர்களிடத்தில் ஏலாதி முதலிய ஔஷதங்களையும் மருத்தெண்ணெய்களையும் வாங்கி உபயோகித்தே அந்த முறிசுரத்தை மாற்றுவித்துக்கொள்கின்றார்கள் காட்டுக் காய்ச்சலை, குயினின் [illegible] மாற்றியவர்கள் யாழ்ப்பாணத்தில் அரிதினும் அரிதெனலாம் முன்னரைக்காட்டிலும் இக்காலத்தில் மேலைத்தேச வைத்தியமுறையைக் கைவிட்டு ஆயுர்வேதமுறையைக் கைக்கொள்வோர் தொகை அதிகமென்பது அனுபவசித்தமாம். யாழ்ப்பாணத்துள்ள பிரபல வைத்தியர்களின் மருந்துச்சாலையில் வந்து வைத்தியஞ் செய்விப்பவர்களின் தொகையையும் இங்குள்ள அரசினர் வைத்தியசாலையிற் சென்று வைத்தியஞ் செய்விப்பவர்கள் தொகையையும் கணக்கிட்டால் ஆயுர்வேத வைத்திய முறையை அனுசரிப்போர் மேலைத்தேசவைத்தியமுறையை அனுசரிப்போரைக்காட்டிலும் எத்தனைமடங்கு கூடிய தொகையினரென்பது நன்கு புலப்படும்.

1924-ம் ஆண்டில் இம்மாகாணத்தில் ஏனைய வருடங்களைக்காட்டிலும் குற்றங்கள் குறைந்திருக்கின்றன. குற்றங்களைப்பற்றிச் சிலவாரங்கட்கு முன்னர் போலிஸ்பகுதியாரின் அறிக்கைப்பத்திரம் என்ற மகுடநாமத்தின்கீழ் வெளியிட்டுள்ளோமாதலின் ஈண்டு யாதுங் கூறாது விடுகின்றேம்.

வித்தியாசா[illegible]ள்: ஊரவர்களினலும் பாதிரிமாரினலும் வைத்து நடத்தப்படும் வித்தியாசாலைகளோடு அரசினரால் ஸ்தாபிக்கப்பட்ட வித்தியாசாலைகள் இம்மாகாணத்தில் 8 உண்டு. இவற்றுடன் இப்பொழுது ஆனையிறவு, கந்தாவளை, போக்கறுப்பு, இயக்கச்சி என்னுமிடங்களில் 4 வித்தியாசாலைகள் கட்டப்படுகின்றன சென்ற வருடத்தில் 5 தமிழ் வித்தியாசாலைகள் மேலதிகமாகப் பதிவுசெய்யப்பட்டன. இந்த 5 வித்தியாசாலைகளிலும் கல்விபயிலும் பிள்ளைகளின் தொகை 385 ஆகும். வேறு ஐந்து வித்தியாசாலை வித்தியாபகுதியாரின் அங்கீகாரத்தைப் பெறலாயின. ஆனால் அரசினர் உதவிபெற்ற மூன்று வித்தியாசாலைகள் நிறுத்தப்பட்டன. வேறு 3 வித்தியாசாலைகள் உதவிநன்கொடைப்பணம் உதவுதலின்றிப் பரீட்சைக்குமாத்திரம் வித்தியாபகுதியாரால் ஏற்படுத்தப்பட்டன. 1924-ம் ஆண்டில் சைவவித்தியாவிருத்திச் சங்கத்தார் இங்கு ஊரவர்களாலே தனித்தனி வைத்து நடத்தப்படும் வித்தியாசாலைகளைத் தங்கள் பரிபாலனத்தின்கீழ்க் கொண்டுசேர்ந்து நன்னிலைப்படுத்துதற்கான முயற்சிகளைச் செய்து வருகின்றனர் 'டிறில்" எனப்படும் தேகாப்பியாசம் அநேக வித்தியாசாலைகளில் நன்கு செய்யப்படவில்லையென வித்தியாதரிசிகள் கூறுகின்றனர்.

கல்விவிஷயமாக யாம் சொல்லத்தக்கது யாதெனில் இக்காலத்துக் கல்விமுறை கற்றபின் உத்தியோகம் பார்த்தற்கு உதவுமேயன்றி வேறு எவ்வகையான தொழில்களையும் பார்த்தற்குப் பயன்படாததாகும். இங்குள்ள வித்தியாசாலைகளிற் கல்விபயிலும் பிள்ளைகளே விசேஷமாகக் கமத்தொழில் கைத்தொழிலென்னு மிவைகளை அருவருக்கத் தலைப்படுகின்றனர். இப்பிள்ளைகள் தங்கள் பெற்றார் செய்துவருந் தோட்டத்திற் சென்று மண்வெட்டியெடுத்து மடைகட்டுவதற்கு வெட்கப்படுகின்றார்கள். துலாக்கொடிட்டை யென்னு மிவைகளையேனுங் கலப்பையையேனும் வீட்டிலிருந்து தோட்டத்திற்கும் வயலுக்கும் முறையே எடுத்துச் செல்ல இலச்சைப்படுகின்றனர். பள்ளிக்கூடங்களிற் கல்விபயிலும் சிறுவர் சிறுமியருக்கு "டிறில்" என்னுந் தேகாப்பியாசம் பயிற்றல்வேண்டுமென வித்தியாபகுதியார் வித்தியாசாலை அதிகாரிகளையும் ஆசிரியர்களையும் வற்புறுத்திநிற்கின்றனர். இந்த "டிறில்" இல்லாவிட்டால் அரசினர் நன்கொடைப் பணமுங் கொடுக்கமாட்டார்களாம் உண்மையாக இங்குள்ள பிள்ளைகள் "டிறில்" செய்வதால் வீண் நேரம் போவதன்றி அடையும் பயன் யாதுமில்லை. [illegible] சிறுவர் செய்யும் "டிறி"லைச் சிறுமியர் செய்தல் சிதம்பர நடராசப்பெருமானுடன் தில்லைக்காளியும் தாண்டவஞ் செய்தவாறாய் முடியும். சிறுவர்கட்குச் சமத்தொழில் கைத்தொழிலில் ஆர்வம் பிறக்கக்கூடிய கல்வியை அரசினர் ஊட்டுதற்கு முயலல்வேண்டும். கோப்பாயிலுள்ள கைத்தொழிற் பாடசாலை அனுகூலமாகவில்லையென வித்தியாபகுதியார் தெரிவிக்கின்றனர். இவ்வித்தியாசாலை அனுகூலமாக வாராததற்குக் காரணம் யாதென அறிதல்வேண்டும். இங்குள்ள ஒவ்வொரு வித்தியாசாலைகட்கும் பக்கத்தில் ஒரு முன்மாதிரித் தோட்டம் தவறாது இருத்தல்வேண்டும். தினந்தோறும் பின்னேரத்தில் வித்தியாசாலைச் சிறுவர் பந்தடிக்கப் போதலையும் "டிறில்" செய்வதையும் விடுத்து இந்தத்தோட்டத்திற்சென்று ஆசிரியர்களின் மேற்பார்வையின்கீழ் தோட்டஞ்செய்துவருதல்வேண்டும். இங்ஙனஞ் செய்வதனால் இப்பிள்ளைகள் தேகாப்பியாசத்தை யடைவதோடு தமக்குப் பின்னுக்குப் பயன்றரத்தக்க கமத்தொழிலையும் பயின்றுகொள்வார்கள். சமத்தொழிலிலே இச்சிறுவர்கட்கு ஆர்வமும் உண்டாகும். இதனை வித்தியாபகுதியார் வித்தியாசாலை அதிகாரிகள் ஆசிரியர்கள் பெற்றாராகிய இவர்களெல்லாருஞ் சிந்தித்தல்வேண்டும்.

உப்பு: சென்ற வருடத்தில் காணவாயில் 29522 தூக்கு நிறைகொண்ட தன்பவேன் உப்பு எடுக்கப்பட்டது. இந்த உப்பு வடமாகாணத்திற்கு உதவப்படவேதில்லை. வெள்ளப்பரவை முதலிய இடங்களில் மழையினால் உப்பு விளையாது பழுதடைந்துபோய் விட்டது. ஆனையிறவில் 144375 தூக்கு நிறைகொண்ட உப்பு விளைவிக்கப்பட்டது இதில் 122622 தூக்கு நிறைகொண்ட உப்பு இங்கே விற்கப்பட்டது. இந்த உப்பில் ஒரு பெருந்தொகை கேருவலைக்கு அனுப்பப்பட்டது ஆனையிறவில விளையும் உப்பு தொடக்கத்தில் ஒரு தூக்கு ருபா 3 சதம் 45 விகிதமாக விற்கப்பட்டது பின்னர் ருபா 3 சதம் 60 ஆக விற்கப்படலாயிற்று. முற்காலத்தில் ஒரு படி உப்பின் விலை 2 சதமென்பர் அரசினர் இந்த உப்பிற்குக் காலந்தோறும் விலை கூட்டி இப்பொழுது ஒரு படி உப்பின் விலை 12 சதமாக்கிவிட்டனர் இக்காலத்தில் மற்றும் எல்லாப் பொருள்களும் விலையேறிவர உப்புமாத்திரம் உள்ளபடி ஏன் இருப்பான் என்று நினைத்து அதன் விலையையும் அரசினர் கூட்டியருகின்றனர்போலும்.



யாழ்ப்பாணப் பட்டின பரிபாலன சங்கம்.

பட்டின பரிபாலன சங்கத்தின்

எட்டாம் வட்டாரப் பிரதிநிதியாக

ஸ்ரீ. மு. தாமோதரம்பிள்ளை

(மாமாத்தம்பி)யைத்

தயவுசெய்து

தெரிவு செய்யுங்கள்.

(Q. 66)



## சுந்தரமூர்த்திநாயனர் அடியார்நடுவு ளிருக்கும்பேறு பெற்றமை.

சுந்தரமூர்த்தி நாயனர் திருவாரூர் வன்மீகநாதரைத் தரிசித்துவரும் நாட்களில் ஒருதினம் அவர்பாற் புதியவுணர்ச்சி தோன்றியது. அவர் ஆலயத்துக்குச் சென்றார்; அங்குள்ள தேவாசிரிய மண்டபத்திலே எண்ணிறந்த அடியார்கள் சூழ்ந்து வீற்றிருந்தனர். அவர்கள் விபூதி உருத்திராக்கம் முதலிய சிவசின்னங்களைச் சிறப்புடன் அணிந்திருந்தார்கள். சிலர் தோத்திரஞ்செய்தனர் சிலர் பஞ்சாட்சர செபம் செய்தனர். சிலர் தம்மை மறந்திருந்தனர். சிலர் "அரகரசிவ" என்றனர். இங்ஙனம் அடியார்கள் வீற்றிருப்பதைக்கண்ட தம்பிரான்தோழர் "சிவனடியார்களின் பெருமை இருந்தவாறென்னே! இவர்களுக்கு யான் அடியனுகும் புண்ணியதினத்தை என்று எய்தப்பெறுவேனே" எனக்கூறினார்; அங்ஙனம் இதர்காறும் எய்தப்பெறாது வீணே காலங்கழித்தமைபற்றி வருந்தினார். பின்னர் அவர் அம்மண்டபத்தைவிட்டுக் கோபுர வாயிலினுள்ளே புகுந்தார். சிவபெருமான் அவரது மனக்கருத்தை நிறைவேற்றும் பொருட்டு அவருக்குக்காட்சிகொடுத்தருளினார். நாயனர் நிலமுற வீழ்ந்து வணங்கினார். சிவபெருமான் தமது அடியார்களின் வழிபாட்டை அருளிச்செய்யும்படி அனுக்கிரகஞ் செய்தார். அப்பால், "சிவனடியார் தமக்குத்தாமே ஒப்பாவர், அவர்கள் என்றும் எமக்கு அடிமை பூண்டொழுகுதலால் எம்மை அடையப்பெற்றவர்கள்; சிவானுபூதிச் செல்வத்தினால் இவ்வுலகையும் வெல்பவர்; ஒரு குறைவுமில்லாதவர்; எவரும் அடைதற்கரிய மேலான நிலையில்நிற்பவர்; அன்பின் மிகுதியினால் என்றும் சிவானந்தத்தை அனுபவிப்பவர்; இம்மை மறுமை இன்பங்களையும் கடந்தவர்; இவ்விதப் பெருமையுடன் விளங்கும் அடியார்களை நீ சென்றடைகுதி; அவர்களைப் பணிந்து அவர்களுடைய புகழைப்பாடுதி" எனச் சிவபெருமான் அருளிச் செய்தார்.

தம்பிரான்தோழர் "சுவாமி! அடியேன் மெய்யடியார்களுடைய பெருமையை இத்துணைத்தென அறியமாட்டேன். எங்ஙனம் பாட வல்லேன்" என விண்ணப்ஞ் செய்தார். (மெய்யடியார்களுடையசேர்க்கையை அடைந்தாலன்றிப் பெருவாழ்வடைதல் அரிதாகுமென ஆன்றோர் கூறுவர். இந்த முக்கியமையை உணர்ந்த மாணிக்கவாசக சுவாமிகளும் அதனைச் சென்றடையும் பேராவலுடையாராய் "அடியேனுன், அடியார் நடுவுளிருக்கும் அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம், முடியாமுதலே என்கருத்து முடியும்வண்ணம் முன்னின்றே" என்றும், "மருளார் மனத்தோடுனைப் பிரிந்து வருந்துவேனை வாவென்றுன், தெருளார் கூட்டங் காட்டாயேற் செத்தே போனற் சிரியாரோ" என்றும் அருளிச்செய்தமையுங்காண்க.) சிவபெருமான் வன்றொண்டர்மீது கிருபாநோக்கஞ் செய்து "தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன்" என அடியெடுத்துக் கொடுத்தருளித் திருவுருக் கரந்தனர். நாயனர் தம்மை யாண்ட பரம்பொருள் மறைந்தமை கண்டு நிலமிசை வீழ்ந்தார்; புரண்டார்; திகைத்துக் கதறினார். பின்னர் ஒருவாறு எழுந்து மெய்யடியார்கள்வீற்றிருக்கும் தேவாசிரிய மண்டபத்தை அடைந்தார்.

நாயனர் சிவனடியார்களைத் தூரத்தே கண்டவுடன் நிலமிசை வீழ்ந்து வணங்கினார். பேரன்புடனும் அச்சத்துடனும் அவர்கள் பக்கலையடைந்தார்; "தில்லைவாழந்தணர்" என்னும் சொற்றொடரையுடைய திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகம் பாடியருளினார். அப்பாடல்களில் மெய்யடியார்கள் ஒவ்வொருவருக்கும் தாம அடியேன் என்பதைத் தனித்தனி வகுத்தருளினர். சிவஸ்தலங்கள் எல்லாவற்றினும் தில்லைச்சிதம்பரம் அதிசிரேஷ்டமுடையதாதலானும், அங்குள்ள சிற்றம்பலத்திலே ஆநவரத தாண்டவம் செய்தருளும் குஞ்சிதபாத நடராசப்பெருமானை அருச்சிக்கும் பாக்கியம் பெற்றோர் தில்லைவாழந்தணராதலினாலும், அவர்கள் "கற்றாங்கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார்" ஆதலினாலும் திருத்தொண்டத் தொகைப் பதிகத்திலே முதலாவதாக வைத்துப் பாடியருளப் பெற்றனர். திருத்தொண்டத் தொகை பாடப்பெற்றபின் சுந்தரமூர்த்தி நாயனர் அவ்வடியார் கூட்டத்தின் மத்தியிற் சென்று எல்லோர்க்குமடியாராய் எழுந்தருளியிருந்தார்.

## எஞ்சிய மதுக்கடைகளையும் இவ்வருடத்திலே தொலையுங்கள்.

எமது நாட்டில் இன்னமும் சில சாராயத் தவறணைகளும் கள்ளுத் தவறணைகளும் நீக்கப்படவேண்டியிருக்கின்றன அவற்றை நீக்கும் பொருட்டு நாம் அரசினருக்கு விண்ணப்பம் செய்யவேண்டிய காலம் இதுவேயாகும். இந்த அரிய தருணத்தை மதுவிலக்குச் சபையாரும் தேசாபிமானிகளுந் தவறவிடவோண்ணது இத்தருணத்தை நாம் பொன்னுகப் போற்றுதல் வேண்டும். சென்ற வருடத்திலே சில தவறணைகள் போதிய சனசம்மதம் பெறுமையினல் நீக்கப்படா தொழிந்தன. அங்ஙனம் நிகழ்ந்தமைக்குக் கட்சிபேதமே காரணமாகும். சில இடங்களில் மதுபானம் வேண்டுமென்று மாறுபட்டு நின்றோர் உண்மையாக அது வேண்டுமென்னும் நோக்கங்கொண்டு நின்றாரல்லர். தவறணைகளை நீக்க முயன்றோர் சிலர் மதுபானப்பிரியரையும் நடப்புள்ள சிலரையும் மறுகட்சியினரென ஆரம்பத்தில் மதித்தமையும் அதனுலுண்டான நிகழ்ச்சிகளும் மனஸ்தாபங்களும் வேறு சில விஷயங்களுமே எல்லோரையும் அவ்விதமாக முரண்பட்டு நிற்கச் செய்தன. மதுபானப்பிரியர்கள் தாமும் இந்த மதுவைத் தொலைக்கவேண்டுமென்னும் பூரண சித்தமுடையவர்கள். இந்த மதுபானத்தினலே தாம் கேடடைந்தமையை அவர்களும் நன்குணர்வர் அது இல்லாதொழியுமேல் அவர்கள் அதனை ஒருபோதும் அருந்தார். தவறணை இருப்பதனலே தான் பழகிய பழக்கத்தைக் கைவிடமுடியவில்லையென்றும், அதனைத் தொலைத்துவிட்டாற் பெரும் புண்ணியமென்றும் மதுபானப்பிரியர் பலர் தம்பாங்களிற் கூறினதையும் யாம்கேட்டிருக்கின்றேம் எனவே கட்சிபேதம் மனஸ்தாபம் முதலியனகாரணமாகப்பெரும்பான்மையான தவறணைகள்நீக்கப்படாதிருந்தன வென்பது புலனுகின்றது. வேறு மனஸ்தாபங் காரணமாக முரண்படும் அன்பர்கள் மதுக்கடைகளை நீக்கும் விஷயத்தில் வன்மம் சாதிக்கவோண்ணது. கரிக்காசுக் கற்பக விருட்சத்தைத் தறிக்க முயல்வதுபோல அற்ப மனஸ்தாபத்தின் பொருட்டு எமது நாட்டைப் பேரிடர்ப்படுத்த வோண்ணது. சென்ற வருடம் இச்சற் கருமத்தில் மாறுபட்டு நின்ற அன்பர்களே இவ்வருடம் முன்வந்து எஞ்சியிருக்கும் தவறணைகளையெல்லாம் வேரோடு அழிப்பார்களென்றும், இதன் பொருட்டு எல்லோரும் கட்சிபேதமின்றி ஒத்துழைப்பார்களென்றும் காத்திருக்கின்றேம்.

## நாவலப்பிட்டி இந்துவாலிபர் சங்கம்.

இச்சங்கம் நாவலப்பிட்டியிலுள்ள சைவ நன்மக்களால் 1919-ம் வருடம் சித்திரை மாதம் ஸ்தாபிக்கப்பட்டது. இது செய்துள்ள அரிய கருமங்களைப்பற்றி மேற்படி சங்கம் எமக்கனுப்பிய சென்ற வருட அறிக்கைப்பத்திரம் நன்கு கூறுகின்றது. சங்கத்தார் சமயவிஷயமாக அதிக சிரமம் பூண்டு உழைத்து வருவதுபற்றி யாம் மிக மகிழ்ச்சியடைகின்றேம். "கதிரேசன் வித்தியாசாலை" என்னும் நாமம் பூண்ட ஓர் சைவப்பாடசாலையை இச்சங்கம் பதினுயிரம் ரூபாவுக்கு அதிகமான பணம் செலவிட்டு அமைத்து நடாத்திவருகின்றது. அறிக்கைப்பத்திரத்தில் அனைக்கப்பட்டிருக்கும் கதிரேசன் வித்தியாசாலைக் கட்டிடப்படம் அதன்வனப்பை இத்துணைத்தெனவிளக்குகின்றது. இச்சங்கம் சமயம் கல்வி என்னும் இரண்டின் விருத்தியின் பொருட்டு ஓர் வாசிகசாலையையும் ஸ்தாபித்திருக்கின்றது. அங்குப் பல அரிய நூல்களிருக்கின்றன. தினசரி வாரமிருமுறை வாராந்த மாதாந்தப் பத்திரிகைகளும் அங்கு வரப்பெறுகின்றன. சைவவித்தியாசாலையில்லாதநாவலப்பிட்டியிலே பெருந்தொகையான பணம் செலவிட்டு உத்தம கைங்கரியம் புரிந்தமை மிகவும் போற்றப்படத்தக்கதாம். இதுபோன்ற புண்ணியமும் பிறிதின்றாம். ஏனைய இடங்களிற் கருமம் பார்க்கச் சென்றிருக்கும் சைவநன்மக்களும் இதனையோர்முன்மாதிரியாகக்கொண்டு சமயாபிமானம்பூண்டு உழைப்பரேல் பெருநன்மையாகும்.

## இந்திய சமாசாரம்.

ஐரோப்பியர்
பிணையில் விடப்பட்டிருக்கின்றனர்.

சென்னையிற் பல வியாபார சமுதாயத்தாரிடம் பணம்அபகரித்த மிஸ்டர் வாட்ஸன் என்பவர் இருபதினுயிரம்ரூபா பிணையில் விடப்பட்டிருக்கின்றவர்.

ஒருபெரும் திருட்டு.

நாட்டுக்கோட்டையிலே ஒருபெண்ணுக்குரிய 65,000 ரூபா பெறுமதியான நகைகளை மோட்டர்பஸ்வண்டியிலிருந்து திருடிய இராமசாமிப் பிள்ளையென்பவன் பிடிக்கப்பட்டான் நகைகள் முழுவதும் அகப்பட்டன.

மதுரையிற் புயலும் மழையும்.

இந்தமாதம் ஏழாந்திகதி மதுரையில் உக்கிரமான புயலும் மின்னலும் இடியும் மழையும் ஒன்றுசேர்ந்து அதிகசேதம் விளைந்துவிட்டன வீட்டுக்கூரைகள் பல முரிந்தன மதுரையிலே தெந்குக் கோபுரத்துப்பக்கத்துள்ள தென்னமரத்தில் இடிவிழ்ந்தது.

ஆள்வாரில் துப்பாக்கிப் பிரயோகம்.

சில நாட்களுக்குமுன் ஆள்வார் சமஸ்தான அதிகாரத்தைமீறி அங்குள்ள குடிகள் கலகமிட்டமையினுல் நிமச்சாறு என்ற விடத்திலே துப்பாக்கிப்பிரயோகம் நிகழ்ந்தது. அதனுல் பதினெட்டுப்பேர் மாண்டனர். பன்னிரண்டுபேர் காயப்பட்டனர் அநேகவீடுகளெரிந்தன இந்தவிபத்தினுல் அங்குள்ள கிராமவாசிகளுக்கு 11,000 ரூபா நஷ்டமாகும் அந்த நஷ்டப்பணத்தைக் கொடுக்கும்படி மகாராசா உத்தரவிட்டிருக்கின்றர்.

அம்மைப்பாலின் உற்பத்தி.

சென்னை ராசதானியில் மாத்திரம் ஆண்டொன்றுக்கு அம்மைப்பால் எடுப்பதற்காகச் சுமார் 1000 பசுக்கன்றுகள் துன்புறுத்தப்படுகின்றனவாம். உலகத்தில் எல்லா இடங்களிலும் இதற்காகத் துன்புறுத்தப்படும் பசுங்கன்றுகள் எவ்வளவாகு மென்பதை யூசித்துப் பாருங்கள். ஒரு உயிர் துன்பப்படும்போது அதனைக்காக்கத் தன்னுயிரைக்கொடுக்கவேண்டிய திருக்க நம்முயிரைக் காக்கப் பிறவுயிரை வருத்துவதென்றல் இரக்கமுள்ள எவர் மனந்தான் வருந்தாது. என லோகோபகாரி கூறுகிறது.

பரிதானம் வாங்கிய நீதிபதி.

சென்ற சனிக்கிழமை லாயல்பூரிலே உயர்தர உப நீதிபதியாகிய மிஸ்டர் ஷிக்ஜா அப்துல் சமட் என்பவர் அரசாங்க உத்தியோகத்தர் கைக்கொண்டொழுகவேண்டிய பிரமாணங்களுக்கு விரோதமாக அங்குள்ள வங்கிக்காரரிடத்தும் பிரபல வியாபாரிகளிடத்தும் அதிகதொகையான பணம் பெற்றமையினுலும் தமக்குக் கடன்கொடுக்க மறுத்தவர்களுடைய வழக்கில் அவர்களுக்கு விரோதமாகக் கடமைசெலுத்தியமையினுலும் அவர்மீது பாஞ்சால அரசினர் வழக்குத்தொடர்ந்திருக்கின்றனர் எதிரி தான் அதிக கடன்காரனென்றும் தனக்குச் சொந்தமாக யாதுமில்லையென்றும் கூறினர்.

ஆசை வெட்கமறியாது.

சென்னையிலே காஸ்மோபாலிற்றல் கிளப்பில் எவ்வித மதுபானமும் உபயோகிக்கக் கூடாதெனத் தீர்மானிக்கப் பட்டிருந்தது. இத்தீர்மானத்தின்பின் அங்குக்குடிவகை யில்லாதொழிந்தது மதுபானவேட்கையுடையார் சிலர் பின்னரும் அதனைக் குடியேற்ற முயன்றனர் சென்றவாரம் நிகழ்ந்த கூட்டத்தில் மேற்படி விஷயம் வாதிக்கப்பட்டது. சற்றில் எவ்விதமாகவேனும் மதுபானத்தை உபயோகிக்கக் கூடாதெனத் தீர்மானிக்கப்பட்டது இற்றைக்குச்சிலமாதங்களுக்குமுன் யாழ்ப்பாணத்துள்ள மதுபானப் பிரியர் சிலர் நீக்கப்பட்ட கள்ளைப் பின்னரும் குடியேற்ற விரும்பி ஓர் கள்ளு மகாநாடுகூட்டினர் அதன் விபரங்களை முன்னரே ஓர் பிரசுரத்தில் வெளியிட்டுள்ளோம். அதன்பின் அந்த மகாநாட்டைப்பற்றிய விஷயங்கள் ஏதும் எமக்கெட்டில.

ஓர் பிராமணப்பெண்
தூக்கிச்செல்லப்பட்டாள்.

கொண்டால் என்னும் இடத்திலே மங்களா என்னும் பதினுறுவயதுப்பிராமணப்பெண்ணை துர்நடத்தையுள்ளவேறெரு பெண் உலாவப் போவதற்கு அழைத்துச்சென்று முன்னே ஒழுங்குசெய்யப்பட்டிருந்த ஒரு மோட்டர் வண்டியிலிட்டுச் சென்றனள். அவள் அந்த இடத்திலே அதிகம் செல்வாக்குள்ள நூர் மகமது என்னும் மகமதிய ரொருவருடைய மகனுக்கு வலாத்காரமாக விவாகஞ்செய்துவைக்கப்பட்டனள். அப்பெண்ணின் கையொப்பத்துடன் அங்குள்ள "பாரூஸ்டர்" என்னுமுத்தியோகத்தருக்கு ஓர் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அதில் தான் மகமதியமதத்திற் சேர நோக்கங்கொண்டிருப்பதாகவும் தன்னை மணஞ்செய்து கொள்ளும்பொருட்டு அந்த மகமதியவாலிபரைக் கேட்டிருப்பதாகவும் எழுதப்பட்டிருந்ததாம். இந்த விஷயமாக இந்தியர்களுக்கும் மகமதியர்களுக்குமிடையே அதிக மனஸ்தாபமேற்பட்டது குற்றத மங்களா என்னும்பெண் தன் பெற்றரிடம்போகவேண்டுமென்னும் பிடிவாதத்துடன் இருப்பதாகவும் தனக்குநேர்ந்த பேராபத்தைநினைந்து அதிக கவலைக்குள் மூழ்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது பெண்ணின் சகோதரனுல் வழக்குத் தொடரப்பட்டது பெண் நீதிஸ்தலத்துக்குக் கொண்டு போகப்பட்டபோது ஆயுத பாணிகளான பொலிசார் காவலாகச்சென்றனர்.

## நாநா சமாசாரத் திரட்டு.

புயலும் மழையும்.

இந்தமாதம் 7உ இங்கிலாந்தின் தென்பாகத்தில் உக்கிரமான புயலடித்தது. வீட்டுச் சாளரக் கதவுகள் பல முரிந்தன; பலவிடங்களில் நெருப்புப் பற்றியது; ஒரு தொத்தகோய்லைத் தீபசாலை எரிந்தது; அநேக மரங்கள் சாய்ந்தன. அதிக மழையினுல் வெள்ளப் பிரவாகமுண்டாயது.

ஜேர்மனியும் பிரான்சும்.

பிரான்சு தன்னைப் பாதுகாக்கும் விஷயமாக ஜெர்மனியுடன் ஒப்பந்தஞ் செய்துகொண்டது. அந்த விஷயமாகப் பிரான்சு ஜர்மனிக்கு அனுப்பிய கடிதத்துக்கு ஜேர்மனி அனுப்பிய பதில் திருப்திகரமானதென ஆங்கில பத்திரிகைகள் கருதுகின்றன. இச்செயல் பிரான்சுக்கும் இங்கிலாந்துக்குமிடையில் ஓர் பிளவை உண்டாக்குமெனப் பிரான்சிய பத்திரிகைகள் கூறுகின்றன. ஜெர்மன் பத்திரிகைகள் வேறுவிதமாகக் கூறுகின்றன.

பணத்தின் கொடுமை

அபேவிபாவின் தலைநகரமாகும் புகாரஸ்டில் அதிகம் வறியவர்களாகிய பெற்றரின் ஏக புத்திரன் ஒருவன் பொருள் ஈட்டும்பொருட்டுச் சிறு வயதிலே வெளி நாட்டுக்குச் சென்றுன். அவன் அங்கு ஈட்டிய பெருந் திரவியத்துடன் அநேக வருடங்களின்பின் பெற்றரிடம் மீண்டான். தவன் தமது மகனென்பதைப் பெற்றர் அறிந்திலர். தான அவர்களுடைய மகனென்பதையும் அவன் அவர்களுக்குக் கூறவில்லை. அவர்களுடைய மகனுக்குத் தான் அதிக நண்பனென்றும், உங்கள் சுகதுக்கங்களை அறிந்து வரும்படி அவன் கூறியமையினுற்றன் தான் வந்ததாகவும் கூறித் தன்னிடத்துள்ள திரவியங்களையும் அவர்களுக்குக் காட்டினுன். அந்த வீட்டுக் கிழவி அவனுடைய பொருளை அபகரிக்க நோக்கங்கொண்டு அவனைக் கத்தியினுற் குற்றிக் கொன்றனள். இதற்குமுன் அவ்வீட்டுக் கிழவன் வெளியே சென்றபோது தன வீட்டிலுள்ள வாலிபன் தனது மகனென்பதை அறிந்தான். அடங்காத பெரு மகிழ்ச்சியினுற் றனது ஏகபுத்திரனைக் கட்டித் தழுவும் பொருட்டு விரைந்து வீட்டுக்குச் சென்றுன். அவனுடைய வரவைக்கண்ட கிழவியும் பெருமகிழ்ச்சியுடன் கிழவனை எதிர்கொண்டு வாலிபனைக் கொன்றவிட்டமையினுல் தாங்கள் செருக்தனவந்தராயினேமென்னும் சந்தோஷ சமாசாரத்தைத் தெரிவித்தாள். தந்தையாகிய கிழவனும் வாலிபன் தங்கள் மகனென்று கூறினுன். பெற்றர் பேராசையினுல் ஏகபுத்திரனைக் கொன்றர்கள். மகன் பெற்றேரின் பேராசையினுல் உயிரை இழந்தான். விந்தையாயினும் பொய்யல்லவொன்றிது.

ஐரோப்பிய நாரீக நூதனம்.

ஐரோப்பாவில் ஸ்விட்ஜர்லாந் தென்னும் நாட்டில் ஜூரிச் மாகாணத்திற்கருகிலுள்ள ராபர்ஸ்விப் என்னும் ஊரில் "ஈடன் சோலை வாசிகள்" என்று சொல்லிக்கொண்டு ஒரு நூதன வகுப்பினர் புதிதாகக் கிளம்பியிருக்கின்றனர். இவ்வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆடம் ஏவ் ஆதிகாலத்தில் வாசஞ் செய்தவந்த வண்ணம் தங்கள் வாழ்நாட்களைக் கழிப்பதே தகுதியுள்ளதென்று நம்புவார்கள். இந்தச் சமூகத்தில் வெவ்வேறு தேசங்களின் பெண்கள் சிலர் வந்து சேர்ந்தார்கள். அச்சங்கத்தில் சைனியத்தினின்றும் விலகியுள்ள ஒரு தளகர்த்தரும் பெரிய வம்சத்தைச் சேர்ந்த இரு கௌண்டெஸ்டும் கூடச் சேர்ந்திருக்கின்றனர். அவர்களைக் கேட்டால், தங்களுக்கு இவ்வுலக வாழ்க்கையின் தற்கால தோரணைகளும், சம்பிரதாயங்களும் பிடிக்கவேயில்லை யென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள் அவர்கள் ஒரே ஒரு குடுத்தா மாத்திரம் அணிந்துகொண்டிருக்கிறார்கள். இக்குடுத்தா முழங்கால் வரையில் தான் தொங்கும் ஆனுல் தெய்வத்தைத் தொழக் கூடும்பொழுது இக் குடுத்தாவையும் களைந்துவிடுகிறார்கள், இவ்வித பிரார்த்தனைக் கூட்டங்கள் வாரத்தில் இரு முறை கூடும்.

அந்த ஊர்வாசிகள் தாங்கள் போகும் சாலைக்கருகிலுள்ள மரங்களுக்கிடையில், ஆடையணியாது ஆண்களும் பெண்களும் பாடிக்கொண்டும் உலாவிக்கொண்டு மிருப்பதைக் கண்டு பிரமித்து இத்தகவலைப் போலீஸாருக்கறிவித்தார்கள், போலீஸார் இக்கூட்டத்தாரை அக்கோலத்துடனே கைது செய்து, அவர்களிடமுள்ள குடுத்தாவை அணியச் செய்து பொலீஸ் ஸ்டேஷனில் அவர்களுடைய பெயரைப் பதிவுசெய்துகொண்டார்கள். இச் சங்கத்தார் தங்களுடைய விலாசம் "பூலோகம்" என்று சொல்லுகிறார்கள். —சு. மி.

### "உலகத்துச்சனங்களுக்கெல்லாம்."

(க்ஷத்திரியன் என்னும் பத்திரிகையிலிருந்து அநுவதிக்கப் பட்டது.)

சீனதேசம் மகாத்மாகாந்திக்கு அனுப்பிய விண்ணப்பம்.

மகாத்மா காந்திக்குச் சீன நாட்டு அரசாங்கத்தாரிடமிருந்து ஒரு தந்தி வந்திருக்கிறது. அது "உலகத்து ஜனங்களுக்கெல்லாம்" என்ற தலைப்புக் கொண்டதாயுளது. அதன் சாரம் வருமாறு.

அன்னியர் ஆதிக்கம்.

சீனத்திற் சில நாட்களாய் ஒரு பெருங் கிளர்ச்சி நடந்து வருவதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். சில கிளர்ச்சிக்காரர்கள் தான் இதற்குக்காரணம் என்று அன்னியநாட்டார் உங்களுக்குத் தெரிவித்திருப்பார்கள். ஆனுல் அங்ஙனம் நீங்கள் நினைத்துக்கொண்டிருந்தால் அது தவறு. கோடானுகோடிக் கணக்கான சீனக்குடிகளின் நன்மையைப் பாதிக்கும் ஒரு விஷயத்தைப்பற்றி உங்களிடம் தப்பெண்ணங்களை அவ்வன்னியர்கள் பரப்பியிருக்கிறார்கள். இதனுல் உங்களுடைய பொருளாதார, ராஜீய நிலைமைகளும் பாதிக்கப்படும். சீனம் ஒரு சுயேச்சை இல்லாத நாடென்றதுக்கரமான உண்மையைச் சீனர்கள் உணர்ந்துவிட்டார்கள். இந்தியாவையும், கொரியாவையும்போல் ஒரே தேசத்தின் ஆதிக்கம் கூட இங்கு இல்லை. அபினியைப் பொறுத்து நடந்த யுத்தத்திற்குப்பின் பற்பல தேசத்தார் பல உடன்படிக்கைகளை இந்நாட்டின்மீது சுமத்தியிருக்கிறார்கள்; இவற்றுல் இத்தேசத்தின் பொருளாதார, ராஜீய முன்னேற்றம் கீழ்நிலைப்படுகின்றது. இந்நாட்டிற் கண் விழுந்துள்ளவர்கள் இவ்வுடன் படிக்கைகளெல்லாம் அநீதியானவை, அதர்மமானவை, மானிடத்தன்மையற்றவை என்றே கருதக்கூடும். இவற்றின் மூலம் சீனத்தின் வியாபாரங்களையெல்லாம் இந்த அன்னியர் ஸ்வாதீனபபடுத்திக்கொண்டுவிட்டனர். தனது கப்பற் கடற் சுங்க விஷயத்திற்கூட சீனம் தலையிட முடியாது.

நாட்டின் திறவுகோலகள்
அன்னியர் கையில்.

தங்கள் நாட்டைவிட்டுப்போகவும், தங்கள் நாட்டிற்குத் திரும்பிவரவும் அன்னியரின் உத்தரவுபெற வேண்டுமென்றுல், இதைவிட வேறென்ன கேவல ஸ்திதி ஒரு நாட்டாருக்கு வாய்க்கக்கூடும்? இவ்வன்னியர் நினைத்தால் எங்களை நாட்டிற்குவெளியே போக்கிவிடலாம்; அவர்கள் மனதுவைத்தால் வீட்டிற்குள்ளேயே வைத்துப் பூட்டிவிடலாம் போக்குவரத்துத் திறவுகோல்கள் அவர்கள் கையிலிருக்கின்றன.

உள்நாட்டுக் கலகத்திற்குக் காரணம்.

இதுமட்டுமா? எங்கள் துறைமுகங்களெல்லாம் அன்னியர் வசம் இருக்கின்றன. ஷாங்கேயை அன்னியர் பற்றிக்கொண்டுவிட்டனர், அங்கு சீனத்தின் சட்டங்கள் செல்லமாட்டா. அன்னியரின் சட்டப்படி அதில் அமுல் நடக்கிறது. தங்கள் நன்மையைக்கருதி அதற்கேற்றபடி கோடுகள் ஆங்கு நடைபெறுகின்றன.

பின்னர் அன்னிய நாட்டார் ஆதிக்கம் எல்லைகடந்து செல்வாக்குச் செலுத்துகின்றது. இதனுல் தான் எங்கள் உள்நாட்டுக் கலகம் எல்லாம் விளைகின்றன சாம்பிராஜ்ஜியத்கொள்கையுள்ள [illegible] செருக்குவாய்ந்த வல்லரசுகள் எங்களுடைய சுயேச்சைக்கும் தேசிய இயக்கத்திற்கும் விரோதமாய்ச் சூழ்ச்சிகளும், சதியாலோசனையும் செய்து, உள்நாட்டிலேயே யுத்தத்தை விளைவித்து வருகின்றன.

இந்தச் சமத்துவமற்ற உடன் படிக்கைகள் இருந்து வருகிறவரையில் எங்கள் நாட்டைச் சீர்திருத்திக்கொள்ளமுடியாது எனவே, சர்வ தேசங்களுக்கும் நடுவில் எங்களுக்குச் சமத்துவமான நிலைகொடுக்க வேண்டுமென வற்புறுத்திக் கேட்கிறோம். இதே உரிமைகளை இதர நாட்டாருக்குநாங்கள்வழங்கப்பின்வாங்கமாட்டோம். கப்பற் கடற் சுங்கபாத்தியம் எங்கள் நாட்டாருக்கே இருக்கவேண்டும். அப்பொழுதுதான் எங்கள் பொருளாதாரம் முன்னேறச்செய்து கொள்ளலாம். எங்கள்தேசத்திலேயே அன்னிய நாட்டின் ராஜீயச் சட்டங்கள் நிலவுவது நிற்கவேண்டும். அப்பொழுது தான் அன்னிய வல்லரசுகள் வந்து போட்டி போட்டுக்கொண்டுஇந்நாட்டைச்சீரழியச்செய்வது ஒழியும்.

சீனம் எழுந்து விட்டது.

உலகத்திலுள்ள மகாஜனங்களே! சிலஏகாதிபத்தியச் செருக்கு வாய்ந்தவர்கள் கூறும் மொழிகளைக்கேட்டு ஏமாறுதீர்கள். சீனத்தில் கிளர்ச்சிக்காரர் அன்னியருக்கு விரோதமாய்க் கலகம் விளைவிக்கவில்லை. சீனம் அயர்ந்த நித்திரையினின்று விழித்து எழுகிறது. ஈவு இரக்கமற்ற அன்னியர்கள் எங்கள் நாட்டைக்கொள்ளை கொண்டுபோகும் அநீதியும், கொடுமையும் தாங்கமாட்டாமல் நாங்கள் எழுகின்றோம். நீங்கள் தர்மச் சிந்தையுடன் எங்களுக்கு ஆதரவு அளிக்கவேண்டும். சமீபத்தில் எங்களுடைய பிரதான நகரங்களில் நடந்த கொலைகளைப்போல் எவ்வளவு கொலைகள் நடந்தாலும் எங்களால் தாங்க முடியும். இத்தகைய கொலைகளால் எங்கள் தேசம் மானிடப் பூண்டின்றி அழிந்து விடாது. அவைகளினுல் எங்களுடைய சுதந்திர இயக்கம்வலுப்படுமேயன்றிவேறில்லை. ஏகாதிபத்தியச் செருக்குக்கொண்ட நாட்டாரின் வலையிலிருந்து விடுவித்துக்கொள்ள எங்களுக்கு அவைவேண்டிய ஊக்கம் அளிக்கும் நாங்கள் எம்முறைகளைக் கையாளுவோம் என்பதை உங்களுக்குள் தீர்க்க தரிசனம் பெற்றவரானாலேயே இப்பொழுது கூற முடியாது.

உலக மகாஜனங்களே! நாங்கள் உங்களை நீதி வழங்கும்படி கோருகிறோம். இந்தச்சமத்துவமற்ற உடன்படிக்கைளாகிய பெருங்கேட்டை அறவே ஒழிக்க எங்களுக்கு ஒத்தாசை புரியுங்கள்.

இப்படிக்கு,
தேசியஅரசாங்கத்தின்
அன்னியநாட்டுக்கமிஷனர்,
காண்டன், சீனம்,

## கடிதம்.

இந்துசாதனப் பத்திரிகாசிரியரவர்களுக்கு.
ஐயா,

உலகத்திற் சிலர் தாமேதேசநன்மைக்கும் விருத்திக்குமாக உழைத்து வருகிறேமென்று ஒவ்வோர் புதினப்பத்திரத்தைப் பிரசுரப்படுத்தி ஒவ்வோர் நாகரீகமான நாமம் சூட்டிவெளியிட்டுக் கையொப்பநேயர்களைச் சேர்ப்பதற்காக ஒவ்வொருவருடைய விலாசத்தையுமிலகுவிலறிந்து முன் இரண்டொரு முறை இனமாகப் பத்திரிகைகளையனுப்பிக் கையொப்பநேயர்கள் சேர்ந்தபின்னரும் இரண்டொரு முறை அவர்கட்குப் பத்திரிகையை யனுப்பி, பின் அனுப்பாமல் நிறுத்துவதற்குக் காரணமென்னவென்று தெரியவில்லை.

சிற்சில கையொப்ப நேயர்களும் தமக்கு பத்திரிகைகைக் கிரமமாகவனுப்புவார்களென்றெண்ணி ஒருவருஷ அரைவருஷ சந்தாவைக் கட்டி எதிர்பார்த்திருந்தவர்களெல்லோரும் பத்திரிகை வரவைக்காணுமல் ஒலமிடுகிறார்கள்.

இவ்விதமான செயல்கள் ஆசாரத்திருட்டுத் தன்மைபோலும். இவர்கள் நம் தேசவாசிகளுடைய பொருளை ஏமாற்றி யபகரிக்கின்றனர். தமது சீவியகாலம் கழிக்க முடியாதவர்கள் செய்யும் செயல் போன்றிருக்கின்றது.

நம்தேசவாசிகளுக்காகத் தொண்டுபுரிகிறேமென்ற தேசாபிமானம் பூண்டவர்கள் இவ்விதம் செய்தல் தகுமோ? இதுவும் கலிகாலச் செயலன்றோ?

25-7-25, கடித.
கண்டி.

### சற்போதமஞ்சரி.

(வண்ணை நகர்
ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை
எழுதியது.)

பாவையரிற் பதர்கள்.

(முற்றொடர்.)

"இரத்தின வகைக ளிழைத்துச் செய்த
செருப்பா னுலுஞ்" சிறு காலுக்
கணிதலே யன்றித் தலையிலே யதனை
அணிதல் வழக்க மில்லையென் பதனை
உணர்ந்திடா மற்றன் றந்தைதா யுடைய
செல்வச் சிறப்பைத் தினந்தொறுஞ் செப்பிக்
கர்வமுற் றெவரையுங் கனம்பண் ணது
தலைநிமிர்ந் தொழுகுஞ் சண்டியும் பதரே!
"எண்ணைற வோதி யெழுத்தற வாசித்
தாலும்" பெண்களின் புத்தி மழுக்கமாம்
என்பதை மறந்து இரண்டுமுன் றெழுத்தைக்
கற்றவுடன் கலைக் கடலென மதித்து
இறுமாப் புற்று எத்திறை யாருக்
கமைந்திடு நாணம் மடமுத லாசிய
குணங்களை விடுத்துப் பல்லோர் குழுமிய
அவைதனி லெழுந்து அச்சமில் லாமற்
பேசிடு முணர்விலாப் பேதையும் பதரே!
வதுவை செய்து மணமக னேடு
பூவும் மணமும் போலவே வாழ்ந்து
பிள்ளைகள் பலரைப் பெற்று மணாளன்
இறந்தபின் கைம்மையா யிருக்குங் காலை
மைந்தரேல் லாரும் வாலிப ரானபின்
அவர்க்கேலா மழியா வடிவுண் டாக்கிப்
வெட்கம் ரோச மனைத்தையும் விடுத்துக்
கருதிய ஒருவனைக் களவிற் கலந்து
களித்திடும் பொல்லாக் காமியும் பதரே!
காந்தனே தெய்வ மென்றுகற் றேர்கள்
இயம்பிய வாக்கை யெட்டுணை யேனும்
மனதிற் கருதி மகிழ்தனுக் கியற்றும்
பணிவிடை யனைத்தையுந் தான்பா ராமல்
வேலை காரனைச் செயும்படி விளம்பிச்
"சதிருக்கு விட்ட தாசிகள் போல"
ஆபா ணங்க ளுயர்ந்தநல் லாடை
தாவணி ரவிக்கை தரித்தயல் வசிக்குங்
கோதைய ரோடு கோயிலுக்குப் போய்
கடவுளைத் தொழாமற் கண்டவ ரோடும்
வீண்கதை பேசி வெற்றிலை யருந்தி
வனப்பினைக் கண்டு வாலிபர் மயங்க
மயிலைப் போல ஒயிலாய் நடந்து
வீட்டுக் கேகுஞ் சேட்டையும் பதரே!
"பொற்கல மதனிற் புனிதமா கியஆன்
இட்டநற் துகினு மெளியதா யயலார்
எச்சிற் கல்லைக் கிச்சித் தொடல்போல்"
ஆசிளங் குமரி யாமென வோம்பி
நாயகன் புரிந்த நன்றிக ளனைத்தையும்
மறந்தந் நியர்பால் மனம்வைத் துழலுந்
தூய்மையில் புருஷத் துரோகியும் பதரே!
(தொடரும்).

### 'பத்திரிகை' 1.

(வண்ணர்பண்ணை
ஸ்ரீமதி. க. நவரத்தின அம்மாள்
எழுதியது)

இவ்வுலகின்கண் பிறந்த மானுடர் யாவரும் அடையவேண்டிய பயன்களுட் பத்திரிகைகளாலடையும் பயனும் ஒன்றும். நாம் பத்திரிகைகளை உபயோகிப்போமாகில், அது நமக்கு வழிகாட்டியாயும் பெருந்துணையாயுமிருக்கும். எப்படிப்பட்டவர்க்கும் நற்புத்தி கூறி நல்வழிப் படுத்தும், சபைகளிலே சென்று பிரசங்கஞ்

செய்யும்பொழுது மிகவும் உற்சாகத்தைக் கொடுக்கும், புத்திசாதுர்யத்தை நன்குவளர்த்துப் பயனடையச் செய்யும். மத ஒற்றுமையை உண்டாக்கும். புறச்சமயத்தவர்களின் நடையுடைபாவனைகளை நாம் கைக்கொள்ளா வண்ணம் விலக்கும்.

பத்திரிகைகளின் அருமை தெரியாத பலர் இக்கால நவீன கதைகளையே பெரிதென எண்ணி, அவற்றையே படித்துக் காலம்போக்குகிறார்கள். அந்தோ! இவர்கள் மதியிருந்தவாறென்னே? பத்திரிகைகளாலடையும் பயனைச் சிறிதாவது எண்ணுகிறார்களில்லையே? இவ்விதமிருந்தால் நாமும் நம் தேசமும் முன்னேற்றமடைவதெங்ஙனம்? இவற்றையெல்லாம் அறிவாளிகள் பலர் பற்பல விதமாய் அறிவித்திருந்தும் நாம் அதைச் "செவிடன் காதிற் சங்கூதியதுபோற்" பிரயோசனப்படுத்துகின்றிலேம்.

சிலர் பத்திரிகைகளை வாசிப்பதால் ஒருவித நன்மையையும் அடைகின்றிலர். ஏனெனில் அவர்கள் பத்திரிகைகளைப் பொழுது போக்கிற்காக வாசிக்கிறார்களேயன்றி அதனாலடையும் பயனைக் கருதியல்ல. சிலர் பெருமையென எண்ணிப் பத்திரிகைகளை வரவழைத்து, ஒரு பக்கத்திற் போட்டுவிடுகின்றனர். இதுவும் ஓர் பெருமையே. இது நமது முன்னேற்றத்திற்கு இடையூறாயிருக்கும் ஓர் பெருங் குறையாம்.

நாம் உலகநடைகளை அறிய விரும்பினால் பத்திரிகைகளை அவசியம் வாசித்தல் வேண்டும். உலக நடபடிகளை யறிந்திருந்தாற்றான் நாம் நம் வாழ்நாட்களை வீண் நாட்களாக்காமல் நன்மையாகக் கழிக்கலாகும். பத்திரிகைகளை வாசித்தால்மட்டும் போதாது. அதன் சற்போதனைகளைக்கொண்டு நல்லவழியில் நடப்பதே மாந்தர்க்கழகு. அறிவாளிகள் எப்பொழுதும் உலகத்திற்கு நன்மை பயக்கத்தக்கவைகளையே போதிப்பார்கள். சிலர் தாம் பத்திரிகைகளுக்கு வியாசம் எழுதுவது பெருமையென நினைத்தும் நடக்கிறார்கள். ஆனால் நாம் அதைக் கவனித்தலாகாது. "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்பது பற்றி, எவர்கள் எவ்விதம் போதித்தபோதும், குற்றத்தை நீக்கிக் குணத்தைக் கொள்வதே நமக்கழகு. பத்திரிகைகளை வாசிக்க வாசிக்கப் புதிய எண்ணங்கள் தோன்றிக்கொண்டேயிருக்கும். அவ்வெண்ணங்களினாலே அறிவு விருத்தியாகும்.

ஒரு நூலை வாசித்தால் இரண்டொரு விஷயத்தை மட்டுமே அறியலாம். பத்திரிகைகளை வாசித்தால் இபோகங்களையும், உலகப் புதினங்களையும், மற்றும் பற்பல விஷயங்களையும் அறியலாம். நாம் ஒரு முயற்சியுமின்றி ஏகாந்தமாயிருக்கும் பொழுது பத்திரிகைகளை வாசிப்போமானால், அப்பத்திரிகைகள் நமக்கு எவ்வளவு மனமகிழ்ச்சியைத் தருகின்றன. பத்திரிகைகளை வாசிப்பதின் பொருட்டெடுத்து, வேடிக்கையுள்ள சிலவற்றை மாத்திரம் வாசித்துவிட்டு வைத்துவிடுவது உசிதமல்ல. பத்திரிகைகளிலுள்ள ஒவ்வொரு விஷயங்களையும் நன்கு வாசித்து, அவற்றின் உட்கருத்தையறிந்து, அதன் வழியே யொழுகல் வேண்டும். அதுவே பத்திரிகைகளாலடையும் பயனாம்.

ஒரு தேசம் முன்னேற்றமடைவதற்குப் பத்திரிகைகளே மிகவும் ஆவசியகம் வேண்டப்படுவன. இந்நாட்களிற் பத்திரிகைகள் நடமாடும் இடங்களோ சிலவாயினும் சீர்திருத்தம் உடையனவாயிருக்கின்றன. மேல் நாட்டார் பத்திரிகைகளாலேயே மேன்மையடைந்திருக்கின்றனர். அவ்விதம் நாமும் ஏன் மேன்மை பெறலாகாது? இவ்வித விஷயங்களிலேயே நாம் அவர்களைப் பின்பற்றுதல் வேண்டும். அதனைவிடுத்து, அவர்களின் நடையுடைபாவனைகளைப் பின்பற்றுவதால் நாம் யாதொரு பயனையும் அடையமாட்டோம்.

ஆதலால் சகோதரிகளே, நாம் அவசியம் பத்திரிகைகளை வாசித்தல் வேண்டும். ஆண் மக்களுக்குப் பத்திரிகைகள் எவ்வளவு அவசியமோ, அவ்விதமே, பெண்மக்களாகிய நமக்கும் அவசியம். நாம் இந்து சமயத்தவர்களாயிருந்தும் நம்மிற் பலர், இச்சமயத்தின் மேன்மையை ஆராய்ந்தறியாமல், புறச்சமயத்தவர்களின் நடையுடைபாவனைகளையே, கைக்கொண்டு திரியும் தற்கால நிலைக்குப் பத்திரிகைகளே மிகவும் அவசியம். பத்திரிகைகளை உபயோகித்து அதன்படி நடப்போமாகில், அது நம்மை உன்னத பதவியிற் சேர்க்கு மென்பதற்கையமில்லை. நல்ல சேலைகளின் மேலும், ஆபரணங்களின் மேலும், மற்றும் பொருள்கள் மேலும் நாம் வைத்திருக்கும் ஆர்வத்தில் சிறிதாவது பத்திரிகைகளின் மேலும் செலுத்தி நன்மைகளைப் பெறுமாறு, எங்கும் நிறைந்து விளங்காநிற்கும் பரம்பொருளாகிய கடவுள் கிருபை புரியுமாறு வேண்டுகின்றேன்.

## ஆவணி மாச விநாயக சதுர்த்தியும் பிறைத் தரிசனமும்.

"தூங்கு பண்டியுந் தளைபடு தறிக்கையுங் கரத்துத், தாங்கு பண்டமுந் தண்டை பம்பிய குறுந்தாளு, மாங்கு நோக்கினனபுலிக்கடவு, டேங்குசீற்றமிக்கெழுந்தனன் கரிமுகச்சிறுவன"

"என்னைநோக்கினை நகைத்தனை திங்கண் மற்றிதனா, லுன்னை நோக்கினருருப்பழிபாதக முற்றுங், கின்னலங்கடற்படிந்திட வொழிந்திலராகித், தொன்னிலத்தவர் நகைதரக் கறங்கெனச் சுழல்வார்"

என உபதேச காண்டத்திற் சொல்லிய பிரகாரம் ஆவணி மாசத்தில் வரும் வளர் பக்கம் நான்காந் திதியாகிய சதுர்த்தித் திதியன்று சந்திரனைக் கண்டவர்கள் சண்டாளத்துவத்தையும் மீளாத்துன்பத்தையுமடைவார்களென விதியாயிருந்தாலும், அற்றைத்தினம் ஸ்ரீ விநாயகப்பெருமானுக்கு அபிஷேகம், மோதகாதிகள் முதலியவற்றைநிவேதிப்பித்துச் சோட சோபசார முதலியவற்றால் பூசித்துப் பின் சந்திரனைக் கண்டால் அந் தோஷமடையாதாம். ஏனைய சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி மாசங்களைக் கூறாது, ஆவணி மாசத்து வளர்பக்கம் நான்காந் திதியாகிய சதுர்த்தித் திதியைக் கூறவேண்டிய காரணம் யாதோவெனின், ஆவணியீ வளர்பக்கம் நான்காந் திதியாகிய சதுர்த்தித் திதியிற்றானே சந்திரன் விநாயகப் பெருமானைப் பார்த்துச் சிரித்ததினமென்றறிக. அது "திங்கள் மற்றிதனாலுன்னை நோக்கினர்" என்று மேலே காட்டிய செய்யுளினாற்றுணியப்படும்,

"மாயிருஞால மீன்றருள் வல்லி கூறதாய் வயங்குவெண்மதியம், மேயதண்கலையால் விண்ணவர் தம்மை விலையுந் துறைதென்புலத்தோரை, எய்வுறநிறையவூட்டி நன்காயவிருந்தவப் பயிர்கண்மற்றெவையுந், தேய்வுறுவாகி நாடொறுமிருந்து திதறவளர்ந்திடச்செய்யும்"

என்னுஞ் செய்யுட்படி சந்திரன் அமுதகலைகளையுடையவனாய், அவைகளிலொழுகும் அமிர்தத்தைத் தேவர்களுக்குணவாகக் கொடுத்துவருதலினால், அமிர்தகிரணன் என்ற பெயர் பெற்றனன். சந்திரமண்டலத்தில் அமிர்தமிருக்கிறதென்று யோகவான்களும் ஆறுதாரங்களுளொன்றாகிய மூலாதாரத்திலிருக்கும் அக்கினியை துவாதசாந்த ஸ்தனமாகிய சந்திரமண்டலம் வரையுமெழுப்பி அதனாலுருகியொழுகும் அமிர்தத்தைப் புசிக்கின்றார்கள். இது,

"எல்லையற்று வளர்சோதிமூல வனலெங்கண்மோன மறுமுறையிலே, வயமிகுந்தவருமமிர்த மண்டலமதிக்குளே மதியை வைத்துநான், வாய்மடுத்தமிர்த வாரியைப் பருகுமன்னுமமுத வடிவமாய்ச், செயமிகுந்தவரு சித்தயோகநிலைபெற்று ஞானநெறியடைவனோ"

என்ற தாயுமானசுவாமிகள் திருவாக்கானுணரப்படும். இச்சந்திரகிரணத்தினாலேயே சகல ஜீவராசிகளும் இன்புறுகின்றனவென்பது சாஸ்திரம். இதனை "பரிதிவெங்கதிரால் வாடும் பற்பலவுயிருமுன்றன், விரிகதிர்க்கற்றை தோயின் மெய்குளிர்ப்புறு கயாமும்" என்ற காசிகாண்டச் செய்யுளாலுணர்க. ஆகையினாற் பிறைத்தரிசனம் விசேஷமுடைத்தாம்.

இங்ஙனம்,
ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்
அம்மன்கோயில்
சுதுமலை.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச்சட்டனைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்ணிழக்கு செ. நா. செ. சாமிநாதச்செட்டியாரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷெ சட்டத்தின் 12-ம்பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| இல. | வ. | ரூபா. | ஊர் பெயர் நகைகளின் விபரம். |
|---|---|---|---|
| | 1924ஆ ஜூன்மீ. | | |
| 3606 | 14 | 200 | தட்டாதெரு செல்வத்துரை பொன்னுத்துரை சிகப்புக்கல் தோடுசோடி 4 நீல வெள்ளை தோடு சோடி 1 |
| 3611 | 14 | 40 | கொக்குவில்மேற்கு தாமோதரம்பிள்ளை பொன்னையா பொன் சிகப்புக்கல் மோதிரம் 1 நீலக்கல்மோதிரம் 1 அரும்புத்தடை 1 குதிரை முழுத்தங்கப்பவுண் 1 |
| 3613 | 15 | 100 | கொட்டடி ஆறுமுகம் பரமனுதன் பொன் கல்முகப்புவைத்த செட்டிக்கொலுசுக்காப்புச்சோடி 1 |
| 3632 | 16 | 300 | தட்டாதெரு செல்லத்துரை பொன்னுத்துரை சிகப்புக்கல் பதக்கம் 4 தோடு சோடி 2 |
| 3658 | 18 | 90 | சிறும்பியடி கந்தையா சுந்தரம்பிள்ளை பொன் கொலுசுக்காப்புச்சோடி 1 அட்சரக்கூடு 1 |
| 3662 | 18 | 100 | கொக்குவில் சுப்பர் கந்தையா பொன் பட்டணங்காப்புச்சோடி 1 ஒற்றைப்பட்டு குண்டுச்சங்கிலி 1 சில்மோதிரம் 1 வெள்ளியில் பொன்போட்ட கொண்டைப்பூ 1 |
| 3680 | 19 | 95 | கன்னாதிட்டி கண்ணுச்சாமிப்பத்தர் அங்கமுத்துப்பத்தர் பொன் பட்டணங்காப்புச் சோடி 1 |
| 3691 | 21 | 40 | அல்லைப்பிட்டி மோசேஸ் செல்லப்பா பொன் கம்பிப்பூரானட்டியல் 1 |
| 3734 | 25 | 15 | சிவன்கோயில் வடக்குவீதி கதிர்காமு கந்தையா சிகப்பு பச்சைக்கல்வைத்த மோதிரம் 1 |
| 3739 | 25 | 20 | திருநெல்வேலி ஆறுமுகம் நமசிவாயம் பொன் கம்பிப்பூரானட்டியல் 1 |
| 3741 | 25 | 16 | கரையூர் செல்லத்தம்பி பெண் செல்லமுத்து இளக்கப்போன நாகபடம் சோடி 1 நாட்டுக் கடுக்கன் சோடி 1 வெள்ளி அரைஞாண்கொடி 1 |
| 3753 | 26 | 12 | கரையூர் தேவசகாயம்பிள்ளை கைம்பெண் விக்டோரியா வெள்ளி ஒட்டியாணம் 1 காற்சங்கிலி சோடி 1 |
| 3771 | 28 | 90 | வண்ணிழக்கு தட்டாதெரு முருகேசு பொன்னையா பொன் கம்பிப்பூரானட்டியல் 1 சங்கிலி 1 கல்வைத்த கவுத்தோர் 1 வெள்ளியால் பொன் போட்ட கொண்டைப்பூ 1 |
| 3782 | 29 | 220 | தட்டாதெரு செல்லத்துரை பொன்னுத்துரை சிகப்புக்கல் தோடுசோடி 5 புரோச்சு 1 |
| 3783 | 29 | 40 | கரையூர் முதலி ஆசீர்வாதம் பொன் பட்டணங் காப்புச்சோடி 1 |
| | ஜூலைமீ. | | |
| 3807 | 2 | 60 | மண்டைதீவு செல்லத்தம்பி வேலுப்பிள்ளை பொன் தாலிக்கொடி 1 |
| 3825 | 3 | 56 | வண்ணிழக்கு சின்னச்சாமி செல்லையா பொன் கல்முகப்புவைத்த கொலுசுக்காப்புச் சோடி 1 |
| 3836 | 5 | 150 | சுண்டிக்குழி பேதுருப்பிள்ளை வைத்தியாம்பிள்ளை பொன் பீலிக்காப்பு சோடி 1 பிள்ளைக்காப்புச்சோடி 1 சங்கிலி அட்டியல் 1 கல்வைத்த கவுத்தோர் 1 சரட்டட்டியல் 1 |
| 3837 | 5 | 500 | சுண்டிக்குழி கல்லதம்பி செல்லையா பொன் சுதேசிக்காசு 80 கோத்தபவுண்மா 1 |
| 3838 | 5 | 100 | ஷை ,, ,, பொன் கல்முகப்புடன் பூக்காப்புச் சோடி 1 |
| 3859 | 7 | 250 | வண்மேற்கு கதிரவேல் கந்தையா பொன்பட்டணக்காப்புச் சோடி 1 செட்டிக்காப்புச்சோடி 1 கம்பிப்பூரானட்டியல் 1 சிகப்புக்கல் தோடு சோடி 1 |
| 3875 | 8 | 75 | சோனகதெரு மம்மது மீருலெவ்வை முகாதீன்பிச்சை பொன் கொலுசுக்காப்புச் சோடி 1 |
| 3876 | 8 | 140 | வண்ணிழக்கு சின்னச்சாமி செல்லையா பொன் பதக்கத்துடன் செட்டிப் பூரானட்டியல் 1 |
| 3878 | 8 | 130 | கந்தர்மடம் இளையதம்பி விநாசித்தம்பி பொன் தாலிக்கொடி 1 |
| 3883 | 8 | 35 | மண்டைதீவு வெற்றிவேல் கார்த்திகேசு இ. பொன் சரட்டட்டியல் 1, மருக்கன் சிகப்புக்கல் தோடு சோடி 1 |
| 3885 | 8 | 80 | சோனகதெரு கறுத்தான் அப்துல்காதர் மம்மது இபொன் சவடி 1 கொடி 1 கம்பிப்பூரானட்டியல் 1 |
| 3931 | 12 | 25 | நாவாந்துறை நீக்கிலாப்பிள்ளை வைத்தியாம்பிள்ளை இ அயல்மாலை 1 |
| 3947 | 13 | 18 50 | நல்லூர் கார்த்திகேசு சுந்தரம்பிள்ளை இபிட்டேசன பதக்கம் 1, வெள்ளியால் பொன் போட்ட கொண்டைப்பூ 1 |
| 3951 | 13 | 80 | சங்குவேலி இராமலிங்கப்பத்தர் கணபதிப்பத்தர்பொன் செட்டிக்காப்புச்சோடி 1 |
| 3964 | 14 | 12 | வசாவிளான் வயிரமுத்து ஏகாம்பரம் பொன் மோதிரம் 1 |
| 3971 | 15 | 80 | நீர்வேலி சின்னப்பு காசலிங்கம் பொன் பூக்காப்புச்சோடி 1 |

விற்பனவு: குரோதனஞு ஆடிமீ 24உ (8—8—25) சனிக்கிழமை பகல் 10 மணியளவில் எடுபட்ட நகை பிறகேங்களாக ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
லெக்திஸ்மேஸ்தர்.

(Mis 685.)


அநேக பரிசுகளும் தங்கமெடல்களும் நற்சாக்ஷிகளும் பெற்று உலகப் பிரசித்தி அடைந்திருப்பதோடு 25-8-23-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் அண்டு மருந்துக் கண்காட்சியில் இவர் மருந்துக்கள் பஸ்ட்கிளாஸ் (முதல்தர) தேவ ஔஷதங்களெனத் தங்க மெடலும் வைத்தியபதி என்ற பட்டமும் பெற்றவர்.

குஷ்ட ரோகிகளே!

Sங்கள் இனி இந்த நரக வேதனையில் அழுந்தாமல் மன உல்லாசமாக இருக்கலாம்,

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

**நமது தாம்பிர பஸ்பத்தின் மகத்துவம்**

Nராதெனக் கைவிடப்பட்ட அநேக குஷ்டரோகிகளை சௌக்கியப்படுத்தி விட்டது.

Eரியுடன் உள்ள குஷ்டம், குறைநோய், தடிப்பு, அரிப்பு, கை கால் சுரணையற்று காது மூக்கு, உதடு, கை கால் சுரணையுள்ள பெருநோய் உள்ளவர்களும் கண்சிவந்து வாய் மூக்கில் துர்வாடை வீசும் மூக்கு அழுகிய அசாத்திய ரோகமுடையவர்களும் சரீரமே ரணமாகி விரல்கள் அழுகிப்போன ஆறாத ரணங்களும், வெள்ளை, வெட்டை, மொழிகளில் சூலை, வீக்கம், வலிகை கால் குடைச்சல், கிரந்தி, கமைச்சல், மேஹநீர், பத்து, அரிகிரந்தி, தடிப்பும நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேகவியாதிகளும், வெண்மேகம், செம்மேகம், கருமேகம் முதலிய சகலவித கர்ம வியாதிகளுக்கும்,

**நமது தாம்பிர பஸ்பம்.**

சாப்பிடுங்கள்.

முப்புவினால் தளுக்கற நீற்றியது; களிம்பற்றது; வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாது. பத்தியமில்லை. வியாதிகளை விவரமாய் எழுதவும்.

80-வேளை பஸ்பம் ரூபா 40. 40-வேளை பஸ்பம் ரூபா 20.

20-வேளை ரூபா 10 ஏழைகள் என்று எழுதினால் பாதிவிலைக்கு அனுப்பப்படும்.

காந்தி! தேஜஸ்!! பலம்!!! தீர்க்காயுள் சந்தானவிர்த்தி,

அடையப் பிரியப்படுகிறீர்களா! அப்படியானால் பழனி, T. R. K.

**தங்கபஸ்பம்.** சாப்பிடுங்கள் (பஸ்பத்தின் மகிமை).

"முடியாத பற்பமது குன்றியுண்ண மூளையான காயமது சிவந்து மின்னும்
பிடியாத மதயானைப் பெலனுக்கொக்கும் ............"

என்ற இக்கவியால் பஸ்பத்தின் பெருமை நன்கு விளங்கும், அபார சக்தி வாய்ந்தது. ஜீரண சக்தி, பசி, ரத்தவிர்த்தி உண்டாக்கும். இந்திரிய விருத்தியும் இந்திரிய புஷ்டியும் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை.

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

100-நாள் பஸ்பம் ரூபா 35. 50-நாள் பஸ்பம் ரூபா 20. 25-நாள் பஸ்பம் ரூபா 10., 10நாள் ரூ 5.

**நீரழிவுக்கு ஆப்ரேக் செந்தூரம்.**

சாஸ்திபோகும் நீரை நிறுத்தும், தாகத்தைக் குறைக்கும், நீரிலுள்ள சர்க்கரையையும்சரீர வெளுப்பையும் மாற்றி தேஜஸ் பலம் மாகடுக்கும். இதோ ஒருமருந்துக்கும் வரப்படாத வியாதி இந்தமருந்தில் தீருவது வெகு ஆச்சரியமொ இருக்கிறது. இப்படி சிரேஷ்டமான மருந்து இதுவரை வெளிவரவில்லை.

40-நாள் மருந்து ரூ. 20, 20-நாளுக்கு ரூ. 10. அனுமான ஆவரை கிருதம் 80 உருண்டை ரூ. 10.

**தாளக பஸ்பம்.**

எவ்வளவு நாட்பட்ட காசம் க்ஷயம், ஈளை, இருமல், ஷ்ட சுவாசம், கோழை, சுபக்கட்டு அவசியம் தீரும். புட்டி ரூபா 4.

**நாக பஸ்பம்.**

சீழ் மூலம், ரத்தமூலம், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் வெகு சீக்கிரம் குணமாகும். ஆப்ரேஷன் தேவையில்லை புட்டி ரூபா 4.

**பிரமேக நிவாரணி.**

ஒரேவேளையில் உங்கள் கஷ்டத்தை நிவிர்த்தி செய்யும், பொறுக்கமுடியாத வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தசதிமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

**இதோ? ரசமணி.**

பூசைக்குவைத்து வாசிதம்பிக்கும் சகல வசியம், தனலாபம், கீர்த்தி, நினைதகாரியசித்தி, தொழிலபிவிருத்தி, புத்திரசந்தானம், மென்மேலும் பெருகும், தொத்துநோய் அலமிருத்து மேகபற்று, சொறி சிரங்கு முதலியவை தீரும். மணி 1-க்கு ரூபா 2. 6-மணி ரூபா 10-0-0.

எந்த மருந்தாகுகு ஆர்டர் செய்தாலும் கடிதம் எழுதும்போது விவரமாய் நிரேக கூறுகளைத் தெரிவிக்கவும், பினாங்கு, சிங்கப்பூர்த்தேசவாசிகள் முன்பணம் அனுப்பவும்.

**வைத்தியபதி, டி. ஆர். கருப்பணபிள்ளை,**
**ஆயுள்வேத வைத்தியசாலை, பழனி.**

Q 66. D.)

## சீனர்களின் முறையீடு

சீனதேசத்திற் பெருங் கலகங்களும், கிளர்ச்சிகளும் உண்டாயிருக்கின்றன. மேலைத்தேசத்துத் தந்திராசிரியர்கள் சிலவற்றிற்கும் சீனத்திற்குமிடையிற் பெரும் யுத்தம் விரைவில் நேருதல் கூடுமோவென உலகத்தவர் பயப்படுகின்றனர். சீனர்களுட் கலகப்பிரியரான சிலரே இவற்றிற் கெல்லாம் காரணரென்ற ஒரு கொள்கை ஏனைய நாடுகளிலுள்ளவர்களுடைய மனதில் இதுகாறும் குடிகொண்டிருந்தது. ஏனைய நாட்டிலுள்ளவர்கள் சீனர்களாகிய தங்களைப்பற்றி இவ்வாறான விபரீத எண்ணங் கொண்டிருக்கிறார்களென்பதைச் சீனதேசத்து அதிகாரிகளும் ஒருவாறு அறிந்துவிட்டனர்போலும். சீனர்கள் ஏனைய நாடுகளில் வசிப்பவர்களெல்லார்க்கும் தங்கள் தேசத்தின் நிலைமையையும் அந்நியர்கள் தங்களுக்குச் செய்யும் அடாத கருமங்களையும் தாங்கள் செய்ய நிச்சயித்திருக்கும் சில நோக்கங்களையும் பற்றிய ஒரு முறையீட்டை எல்லாச் சாதியாருக்கும் அனுப்பியிருக்கின்றார்களாம். அந்தமுறையீட்டை இந்தியர்கட்கு அனுப்புபோது மகாத்மாகாந்தியை விளித்தே சீனதேச அதிகாரிகள் அனுப்பியிருக்கின்றார்கள். அம்முறையீட்டை இற்றைப் பிரசாதத்தின் பிறிதோரிடத்தில் உலகத் தச்சனங்களுக்கெல்லாம்" என்ற மகுடநாமத்துடன் "சுதந்திரியன்" என்னும் பத்திரிகையினின்றும் அநுவதித்துவெளியிட்டுள்ளேம். அம்முறையீட்டைப்பார்க்கும்போது சீனர்மீது எவர்க்கும் அநுதாபம் ஏற்படும். தந்துவாரச்சியத்தார் செய்வது முறைமையன்றென்பது புலப்படும் சீனர்களின் முறையீட்டைப் படித்துப்பார்க்கும்போதே யாரிடத்து நீதி யாரிடத்து அநீதியென்று புலப்படுமாதலால் யாம் இங்கே அதனையிட்டு யாதும் குறிப்புரைகூறுதல் மிகையென விடுத்தாம்.

## உலகம் பலவிதம்.

ஆ! என்ன ஆநந்தம்!! எவ்வளவு பரிசுத்தம்!!! இப்படி எப்பொழுது இருந்ததோ! கலியுகவரதராகிய நல்லூர்க் கந்தசுவாமியாரின் மகோற்சவம் தொடங்கி நடைபெறுகின்றது இந்த யாழ்ப்பாணத்தில் எங்கே பார்த்தாலும் சைவமணம் வீசுகின்றது. இங்குள்ள எந்த வீட்டைப் பார்த்தாலும் அந்த வீடெல்லாம் பெருக்கி மெழுகிச் சாணந்தெளித்துக் கோலமிட்டபடி காணப்படுகின்றது. ஆடவர்கள் பெண்கள் சிறுவர் சிறுமியர் விருத்தர் பெரியர் சிறியர் உயர்ந்த சாதியார் தாழ்ந்த சாதியார் என்ற பேதமின்றி எல்லாரும் ஸ்நானஞ்செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்தவராய்த் திரிபுண்டரமாக விபூதியைத் தரித்தவராய் நெற்றியிற் சந்தனப்பொட்டிட்டவராய்க் காதின்மேல் பூவேனும் வில்வமேனும் வன்னிப்பத்திரமேனும் அணிந்தவராய்க் காணப்படுகின்றனர். எவரைப் பார்த்தாலும் கந்தபுராணத்துள்ள தோத்திரங்களைப் படிப்பாரும் கந்தரலங்காரம் கந்தரனுபூதி திருப்புகழ் திருமுருகாற்றுப்படை கந்தர்சஷ்டிகவசம் கதிர்காமவேலவர் திருவருட்பா வேல்விருத்தம் மயில்விருத்தம் சுப்பிரமணியவிருத்தம் கதிரையாத்திரைவிளக்கம் கந்தரந்தாதி திருப்போரூர்ச்சந்நிதிமுறை எனப்படும் சுப்பிரமணியக்கடவுள் தோத்திரங்களைப் பாராயணஞ் செய்பவராகவே காணப்படுகின்றனர். "மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால், வைதாரையும் அங்கு வாழவைப்பான்" என்றபடி இந்தத் தோத்திரங்களின் ஒன்றையாயினும் பத்தியுடன் பாராயணஞ் செய்வோர்க்கு அந்த அறுமுகக் கடவுள் அருள்புரியாதிருக்க முடியுமா! மற்சமாமிசம் புசிப்போர் அவற்றை விட்டனர்; மதுபானஞ்செய்வோர் அதனை மறந்தனர்; சூதாடுவோர் அதனையொழிந்தனர்; மீன் பிடிப்பதையே தொழிலாகக் கொண்டு சீவிக்கும் பரதவருட பலர் இந்த இருபத்தைந்து நாட்களும் மீன்பிடிக்கப் போவதில்லையாம்.

* * *

இந்த இருபத்தைந்துநாளும் விரதமிருந்து வேலாயுதக் கடவுளைத் தரிசித்த பின்பே போசனமருந்துவோர் ஆயிரக்கணக்கானோர். பாற்காவடி கொண்டு செல்வோர் பன்னூற்றுக் கணக்கானோர். காயத்திலூற் செய்த பாவங்கள் பஞ்செனப் பறந்தோடும்வண்ணம் திருவீதியிலே அடியற்ற மரம்போல விழுந்து அரோகரா வேலும் மயிலும் என்று நா இடையறாது சொல்ல அங்கப்பிரதக்ஷிணஞ் செய்யும் ஆடவருஞ் சிறுவரும் கணக்கில்லார். அடியழித்துப் பஞ்சாங்க நமஸ்காரஞ் செய்யும் பெண்களுஞ் சிறுமியரும் பலர். முருகனைத் தரிசித்து மீளும் அடியவர்கள் தாகத்தினால் வருந்தாது தத்தம் வீட்டுத் தலைவாசல்களிலும் திருமடங்களிலும் சுத்தமான நீர்மோர், பெற்ற தாய் பிள்ளைகட்கு ஊட்டும் ஆர்வத்தோடு வார்க்கும் புண்ணியசீலர் எண்ணிறந்தோர். இங்ஙனம் பல்லாயிரக்கணக்கானதொண்டர்கள் இம்மகோத்சவகாலத்தில் நாள்தோறும் அறுமுகக்கடவுள் திருச்சந்நிதியையடைந்து அன்போடு வழிபட்டு வருகின்றனர்.

* * *

கந்தா, முருகா, கதிர்வேலா, கார்த்திகேயா, காங்கேயா, வடிவேலா, இக்கலியுகத்திலே நீயே கண்கண்ட தெய்வம்; "உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன், பின்னை பொருவரை யான் பின் செல்லேன் - பன்னிருகைக். கோலப்பா வானோர் கொடிய வினை தீர்த்தருளும், வேலப்பா செந்திவாழ்வே" இப்பொழுது நடக்கின்ற வருடமும் வரப்போகின்ற வருடமும் பஞ்சம் பசி கொடிய நோய் கலகம் முதலிய அநர்த்தங்கட்கெல்லாம் ஏதுவான காலமென்று காலங் கண்ட முதியோர் சொல்லக் கேட்டிருக்கின்றேம். இப்பொழுது இவைகளுக்குரிய உற்பாதங்களும் காணப்படுகின்றன. சிறிது செல்வராக இருந்தவர்கள் எத்தனையோபேர் இங்கே காதிராப்பிரகாசம் வறியவரானார்கள் தாங்கள் உண்ணாமல் உடாமல் தருமஞ் செய்யாமல் சேர்த்துத் திரட்டியபணத்தைக் கொண்டுபோய் நம்பிக்கைக்குக் கொடுத்துவைத்தார்கள். அந்தப்பணத்திற்கு மோசம் வந்துவிட்டது; அரிசிவிலை அதிகமாகின்றது; நெல்விலை யேறுகின்றது செய்வது இன்னதென்பது எங்கட்குத் தெரியவில்லை. கடவுளே, அறியாமையினாலும் செல்வச்செருக்கினாலும் உன்னை இதுகாறும் மறந்திருந்தோம்; இப்பொழுது சங்கடம் வந்து சாரவே உனது ஞாபகம் வருகின்றது. உன்னைத் தஞ்சமென்று அடைகின்றோம். "பொல்லாத சேயெனில் தாய் தள்ள நீதியோ, புகலிடம் பிறிது முண்டோ" என்றபடி பிள்ளைகளாகிய நாங்கள் செய்த குறைகளைப் பரமபிதாவாகிய நீ பொறுத்துக்கொள்ளுதல் வேண்டும். எங்களுக்கு நேரும் ஆபத்துக்களை

"காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்,
ஆர்க்கும் பரமாம் அறுமுகவா—பூக்கும்,
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல,
இடங்காண் இரங்காய் இனி" என்று

ஒவ்வொருவரும் அந்த ஆறுமாமுகப் பரனை அன்புடன் போற்றுதல் வேண்டும். அங்ஙனஞ் செய்வோமேல் எவ்வகையான தீவினையும் சூரியனைக் கண்ட பனியென அகலுமென்பது திண்ணம்.

* * *

"இருவர்தஞ் சொல்லையும் எழுதரங் கேட்டே
இருவரும் பொருந்த உரையா ராயின்
மனுநெறி முறைமையின் வழக்கிழந் தவர்தாம்
மனமுற மறுகி நின்றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி யீர்வதோர் வாளா கும்மே"

என்றபடி வழக்கைக்கேட்டு நீதிசொல்லுவோர் எவராயிருப்பினும் இருபகுதியார் முறையீட்டையும் நன்குகேட்டு வன்றிச் சிந்தித்து எள்ளிக்காய்ப் பிழர்தாலன்ன நீதிப்படி சொல்லுதல் வேண்டும். அங்ஙனமின்றி வாயில்வந்தபடி கூறுவரேல், விஷயத்தை உள்ளபடி விளங்காது நீதி சொல்வரேல், ஒன்றை விளங்கிக்கொண்டு பிறிதொன்றைச் சொல்லுவரேல் அவர்களும் அவர்கள் சந்ததியாரும் நாசமாவரென்பது பெரியோர்கோட்பாடு. சென்றவாரம் நடந்த யாழ்ப்பாணச் சுப்பிறீங் கோட்டு விசாரணையில் உசனிற் கொலை வழக்கு விஷயமாக நீதி சொல்ல வந்த யூரிமார்கள் யாழ்ப்பாணத்தாருக்கு முன்னொருபோது மில்லாத வசையைத் தேடிவிட்டார்களென்பது அந்த யூரிமாருடைய செய்கையினாலே நன்கு விளங்கத்தக்கதாயிருக்கின்றது. இந்த வழக்கிலே பாரிக்கப்பட்ட குற்றமோ கொலைக் குற்றம். சொல்லவேண்டிய தீர்ப்பெனிலோ உயிரோடு பொருந்தியதாகும். இங்ஙனம் மெல்லாமிருப்பவும் நம்முடைய யூரித்துரைமார் ஒன்றைச் சொல்லவென எண்ணிக்கொண்டிருந்து, நீதியவான் கேட்கச் சென்று பிரமாவிடம் நித்திரை வரங்கேட்ட கும்பகர்ணனைப்போல வாய் தடுமாறி இன்னொன்றைச் சொல்லிவிட்டார்கள். இவர்கள் ஒன்றை நினைத்துக்கொண்டு பிறிதொன்றைச் சொல்லுகின்றார்களென்பதைக் குறிப்பாலுணர்ந்த நீதிபதி இவர்களைத் தனித்தனியே யழைத்துக் கேட்டார் அப்பொழுதும் அப்படியே சொன்னார்கள். நீதிபதி பெஞ் செய்யார் யூரிமார் சொற்படி எதிரிகளிருவருக்கு மரணதண்டனை விதித்துவிட்டார். பின்னர் இவர்கள் போய் நீதிபதியிடம் தாங்கள் நினைத்துச் சொல்லவந்தது பிறிதொன்றென்று முறையிட்டிருக்கின்றார்கள். இத்தமோசமான இவர்களிடத்து நேர்ந்ததற்குக் காரணம் யாதெனவாராயுமிடத்து தாங்கள் நினைத்த விஷயத்தை அங்கிலபாஷையில் உள்ளபடி விளங்கவைக்க இயலாமையேயாம். ஆங்கிலபாஷையினாலே தாம் நினைத்ததை உணர்த்தும் வல்லமை இவர்களிடத்து அற்பமாக இருந்தால் விஷயத்தைத் தமிழிற் சொல்லிவிடலாமே. சொன்னால் அதற்கென இருக்கும் முதலியார் அதனை ஆங்கிலத்தில் நீதிவானுக்கு நன்குபுலப்படுத்தியிருப்பரே. யூரிமாருக்கு இது ஒரு படிப்பினையாகவிருக்கட்டும். இனிமேலாயினும் இவர்கள் சாவதானமாக நடந்துகொள்ளுவார்களாக. எங்கள் காருண்ணியம் பூண்ட தேசாதிபதி இவ்வழக்கு விஷயத்தை உள்ளபடி உணர்ந்து அதற்குத் தக்க தண்டனை விதிப்பரென ஊரவர் காத்திருக்கின்றனர்.

## சமாசாரம்.

### தெல்லிப்பழை விழிசிட்டிச் சிவஞான வித்தியாசாலை.

நேற்றைய தினம் (ஆடி மீ கஉ செவ்வாய்க்கிழமை) ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகளுடைய குருபூசைத் தினமாதலால் அன்று மேற்படி வித்தியாலயத்தில் ஆசிரியருளொருவராகிய எஸ். கே. பிள்ளை அவர்களால் சுந்தரமூர்த்திசுவாமிகளுடைய திவ்விய சரித்திரம் பிரசங்கிக்கப்பட்டது.

### சைதடி முத்துக்குமாரசுவாமி கோயில்.

இவ்வாலயத்திற் சென்ற ஞாயிற்றுக்கிழமை துவஜாரோகணமாகி உற்சவம் நடந்துவருகின்றது. வரும் பூரணையன்று தீர்த்தோற்சவமும் அடுத்தநாள் திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும். சைவப் பாடசாலைகளின் மானேசர் பிரம்மஸ்ரீ இ. குருஸ்வாமிக் குருக்களவர்களே வழக்கம்போல் உற்சவாசாரியராயிருந்து கிரியைகளை விதிப்படி சிறப்பாக நடத்திவருகின்றனர்.

### சேனைக்குடியிருப்பிற் கள்வர்பயம்.

புத்தளத்தைச்சேர்ந்த சேனைக்குடியிருப்பிலே கள்வருடைய அக்கிரமம் அதிகப்படுகிறது. இவ்வருடத்திலே அக்குள்ள அநேக வீடுகளினுட் கள்வர் புகுந்து பல பொருள்களையும் திருடிச் சென்றனர். இரண்டு மூன்று தினங்களுக்குமுன் ஒரு இரவு கள்வர் அயலுள்ள மூன்று வீடுகளை இடித்துத் திருடிச் சென்றனர்.

### கழனியாற்றில் நீராடி மாண்டமை.

சென்ற திங்கட்கிழமை கொழும்பிலே மூன்று சிங்களவர் கழனியாற்றில் நீராடிய போது சைமன் என்னும் ஒருவனை நீரோட்டம் இழுத்துச்சென்றது. ஏனைய இருவரும் நீந்தத் தெரியாதவர்களாதலினால் அவனுக்குத் துணைபுரியச் சென்றிலர். அவர்கள் உரத்துக் கூவின சத்தங் கேட்ட பொலீசர் அங்குச் சென்று பிரயாசைப்பட்டும் சைமனை மீட்க முடியவில்லை. அவனுடைய பிரேதம் அன்று பிற்பகலிலேயே கண்டு எடுக்கப்பட்டது.

### மாத்தளையிலே தண்ணீர்க் கஷ்டம்.

மாத்தளையிலே அநேக நாட்களாக மழையில்லாமையினால் அங்கு தண்ணீர்க் கஷ்டம் உண்டாயிருக்கிறது. சென்ற பதினைந்து நாட்களாக அங்குள்ளார் ஸ்நானஞ் செய்யக்கூடாதென பட்டின பரிபாலன சங்கத்தாரால் தடுக்கப்பட்டிருக்கின்றனர். சிலவிடங்களிலே குடிப்பதற்குத் தானும் தண்ணீர் கிடையாது. அங்குள்ள வான்பயிர்கள் தாமும் வாடுகின்றன. உஷ்ணம் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. வெய்யில் நெருப்புப்போல எரிகின்றது.

### தீப்பாய்தல்.

உடப்பு துரோபதை அம்மன் கோயிலில் தீப்பாயும் திருவிழா நடைபெறுவது வழக்கம். அதுபோல் இவ்வருடம் ஆடி 4-ந் தேதி துவஜாரோகணமாகி 18 நாள் உற்சவம் நடைபெறுகின்றது. கடைசி நாளாகிய புதன்கிழமை மட்டையோகமான படியால் ஆடி மீ 21-ந்தேதி சனிக்கிழமை தீப்பாய நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அன்று காலை அக்கினியைச் சட்டியின் கண்ணே எடுத்துக் குழியில்வைத்து அநேக வண்டிக்கணக்கான புளியமரங்களை அக்கிடங்கில் அடுக்கித் திமூட்டுவார்கள். அது ஏறக்குறைய 3மணி நேரத்தில் எரிந்துவிடும். அதன்பின்பு பின்னேரம் 3 மணி தொடக்கம் 6 மணி வரையில் அநேக ஆயிரக்கணக்கான சனங்கள் அதிலே நடந்து செல்வார்கள். கடித.

### பொழுதுபோக்க மலையேறினோர்

சென்ற ஞாயிற்றுக்கிழமை காலையில் மாத்தளையிலே, வாலிபரும் ஆசிரியரும் கிராமத்தாரும் பிறருமாக முப்பது பேர்கொண்ட ஒரு கூட்டம் பொழுது போக்கும் நிமித்தமாக உவில்ஸ்கூதயர் தோட்டத்தின் பக்கத்துள்ள மலைச்சிகரத்தைப் பார்க்கும்பொருட்டுச் சென்றது. அக்கூட்டத்தார் மலையின் சிகரத்தை அடைந்து அங்கு அதிக குதூகலமாகச் சிறிதுவேளை போக்கியபின் கீழே யிறங்கினார்கள். அவர்கள் மார்க்கத்தில் வழிதப்பி அடர்ந்த காட்டினுட் புகுந்து அலைந்தார்கள். ஈற்றில் அவர்களெல்லோரும் நான்கு கூறுகப் பிரிந்து வழிதேடப் புறப்பட்டார்கள். சிலர் நடக்கும் சத்தியற்றனர்; சிலர் அறிவிழந்தனர்; சிலர் அஸ்கிரியா என்னுமிடத்தைக் காத்திராவண்ணம் அடைந்தனர்; சிலர் கற்களாலும் முட்களாலும் கட்டைகளாலும் அதிக காயமுற்றனர். எல்லோரும் பேராபத்திலகப்பட்டு இடர்ப்பட்டபின் ஒருவாறு தமது காலட்சேபத்தை முடித்தார்கள்.

### இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதி

இலங்கைத் துறைமுகப் பகுதியாரின் அறிக்கைப் பிரகாரம் இலங்கையிலுள்ள வியாபாரம் முன்னிருந்ததிலும் செழிப்புற்றிருக்கிறது. 1923-ம் 1924-ம் வருடங்களிலும் பார்க்க இவ்வருடம் வியாபாரம் அதிகம் கூடியிருக்கிறது. சென்ற ஜூன்மாதம் முடியப் பிறநாடுகளிலிருந்து இங்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் விலை மதிப்பு 176 224,557 ரூபாவாகும். சென்ற வருடத்தில் 144, 816,449 ரூபா. 1923-ம் வருடத்தில் 154,216,512 ரூபா. இவ்வருஷம் ஜூன் மாதம் முடிய இங்கிருந்து பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் விலைமதிப்பு ரூபா 210,770,479. சென்ற வருடத்தில் ரூபா 191,780,469. 1923-ம் வருடத்தில் ரூபா 194,701 761. சென்ற ஜூன் மாதத்தில் மாத்திரம் இவ்விருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் விலைமதிப்பு 44,466,891 ரூபாவாகும். தேயிலை றப்பர் என்னும் இவற்றின் விலையதிகப்பட்டமையே இதற்குக் காரணமாகும்.

### குவாலாலம்பூர்ச் சைவசித்தாந்த சங்கம்.

இந்த வருடம் ஆனி மீ கூஉ வெள்ளிக்கிழமை மாலை மேற்படி சபா மண்டபத்தில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பிரபாவம் ஸ்ரீ கோவிந்தராச முதலியார் அவர்களால் பிரசங்கஞ்செய்யப்பெற்றது. மேற்படி சங்க ஆதரவில் ஆனி மீ கஙஉ சுக்கிரவாரம் மாணிக்கவாசகசுவாமிகள் குருபூசையும் புராணப் பிரசங்கமும் செய்யப்பெற்றன. —கடித.


### சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து.

குளிர் (துலைப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்டர் மைக்கோயின் "சுரசங்காரி" ஔஷதம் உடனே மாற்றிவிடும். டக்டர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது மற்றும் வைத்தியர்களினால் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு முன்று போத்தலை உபயோகிப்பதால் முற்றாக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள் ஒருபோத்தல் கொண்ட மருந்தின்விலை ரூபா 1 சதம் 50. இம் மருந்து கொழும்பு கார்கில்ஸ் (Cargills Ltd.) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறற்பாலது. Y 47.

### விளம்பரம்.

பினாங்கு தீ. செ. கடையிலிருந்தும், சிங்கப்பூர் தீ. செ. கடையிலிருந்தும் இவ்விடம் யாழ்ப்பாணம் கு. வெ. கடையிற் பணம் வாங்கும்படிவந்த உண்டியல்களில் மேற்படியார் பணம் கொடாத உண்டியல்களுக்கு இவ்விடம் பி. கு. பி. சு. கடையில் பணம் கொடுக்கிறதாக ஒப்புக்கொண்டிருக்கிறபடியால் மேற்கண்ட இரண்டேர்களிலுமிருந்து வந்திருக்கிற உண்டியற்காரர்கள் ஷை பி. கு. பி. சு. கடையில் வந்து பணம் வாங்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

தீ. செ. சுனக்கு தியாகராசபிள்ளை.
வண்மேற்கு,
27-7-25.
(Mis. 684.)

**பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.**

---


அஷ்டபந்தனமருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

ருத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

ச. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(M. 37)


---


தேக்கமரம்.

புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்க மரங்கள், நீழம் 6 அடிதொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 10 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம்வரையி லுள்ளன. நீண்ட மரங்கள் குறைவாயிருப்பதினால், எம்மிடம் வழக்கமாயெடுப்பவர்கள் தங்கள் ஆடர்களை முன்னமே செய்துகொள்ளவேண்டியது.

S வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு,

தந்திவிலாசம்
ஆ பி. வல்லுவெட்டித்துறை.

(H. 37)


---


**ஆறுமுகநாவலரவர்கள்**
அச்சிற்பதிப்பித்த
**தமிழ்ப் புத்தகங்கள்**
வண்ணார்பண்ணையில்
இனி
சித. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார்
அவர்களிடம்
விலைக்குப் பெற்றுக்கொள்ளலாகும்.

1-6-25. ச. விசுவநாதபிள்ளை.

(Mis. 657.)


---


விளம்பரம்.

இனும்! கலண்டர் இனும்!!

எங்கள் கம்பெனியில் கட்டி வெள்ளிச் சாமான்களும், நம். 1-ம், நம். 2-ம் வெள்ளியாலும் மிச்சம் துப்புரவாக வேலைசெய்த முரிச்சுக் குத்தி கெங்காதரக் கொடி, கைக் கோர்வை முகப்புக் கொடி, காஞ்சிக் கொடி, கால் தண்டை, செயின் கொலிசு, இன்னும் காலிற் போடுஞ் சாமான்களும், மயிர்மாட்டி, கடயம், ஒட்டியாணம், மோதிரம், புதுச் சிகப்புக் கம்மல், தோடு, கடுக்கன், சீமை வயிரக்கப்பி சட்டங்கள், ஜவுளி பட்டும் பருத்தியும் கலந்த சேலை, சோமன், இன்னும் வேண்டிய சாமான்களும் இருக்கின்றன. தாங்கள் விலாசந் தெரிவித்தால் கிரயஜாபிதா அனுப்புகிறோம்.

கா. பிளே செட்டி அன் கோ.,
குகை சேலம்,
தென் இந்தியா.

(H. 39)


---


புதிய தினுசுகள் சகாய விலைகள்
நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனாரிஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னாடு, காஞ்சீபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய தினுசுகளில் சுத்தமான பட்டுச்சேலைகளும் ஜரிகைநூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
COLOMBO.

(Y. 39).


---


சேலம் ஜவுளிதினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் செய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுன்பேட்டு, இன்னும் பல மாதிரிகள் இருக்கிறது. விலாசம்தெரிவித்தால் பிறைஸ் லிஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்.

விலாசம்:
கோ ப. சி. அ. வேணுகோபால்செட்டியார்
அன்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
குகை, சேலம். S I.

தந்தி விலாசம்:
வேணுகோபால்,
சேலம்.

(H 32.


---

யாழ்ப்பாணம்
சைவபரிபாலனசபையாராற்
பிரசுரஞ் செய்யப்பெற்ற
**புத்தக விளம்பம்.**

| | ரூ. ச. |
|---|---|
| முதற்பாலபாடம் (சித்திரசகிதமானது) | க0 |
| இரண்டாம் பாலபாடம் ,, | கடு |
| மூன்றும் பாலபாடம் ,, | உ0 |
| நான்காம் பாலபாடம் ... ... | ௩0 |
| ஐந்தாம் பாலபாடம் ... ... ... | ச0 |
| ஆறும் பாலபாடம் ... ... ... | ௫0 |
| கலாமஞ்சரி விளக்கத்துடன் | எடு |
| கிருட்டிணன்தூது, உரையுடன் | அடு |
| நமச்சிவாயமாலை, உரையுடன்... | ௩ |
| ஆத்திசூடி ... ... ... | ௩ |
| வெற்றிவேற்கையுரை ... ... | ௩ |
| வாக்குண்டாமுரை ... ... ... | ௩ |
| நல்வழியுரை ... ... ... ... | ௩ |
| நன்னெறியுரை ... ... ... | ௩ |
| இனியவை நாற்பதுரை (ஆங்கிலமொழிபெயர்ப்புடன்)... ... ... | கஉ |
| இலக்கண வினவிடை... ... ... | க0 |
| நிகண்டு கக-வதும் கஉ-வதும் ... | உடு |
| திருவாதவூரடிகள்புராண மூலம் ... | உடு |
| திருச்செந்தூர்ப்புராணவுரை | |
| கிளேஸ்காகிதம் ... ... ... | க-உடு |
| றவ்காகிதம்... ... ... ... | க-00 |
| கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் | க0 |
| கந்தசஷ்டி கவசம் ... ... ... | ௩ |
| சுப்பிரமணியசுவாமி விருத்தம் ... | ௩ |
| ஆறுமுகசுவாமி விருத்தம்... ... | ௩ |
| பிள்ளையார்கதை ... ... ... ... | கஉ |
| கதிரைமலைப் பேரின்பக்காதல் ... | கஉ |
| பிரபஞ்சப் பெருவழக்கு ... ... | க0 |
| இந்துசமயி தாவரஜீவியாயிருத்தலேன்? ... ... ... ... ... | க0 |
| சாவித்திரி சரித்திரம் (புதியபதிப்பு) | ௬ |
| குமணசரித்திரம் ,, | ௬ |
| பஞ்சரத்தினத் திருப்புகழ் ... .... | ௩ |
| சோமவாரவிரதமான்மியம்... .... | க0 |
| கந்தவிரதமான்மியம் .... .... .... | க0 |
| சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு) | கடு |
| மறைசையந்தாதி ... ... ... | உ0 |

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்துக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்.

முற்பணமனுப்புவோர் முத்திரையனுப்பாது போஸ்றல் ஆடரேனும் மணி ஆடரேனும் முத்திரைச்செலவுஞ் சேர்த்து வண்ணார்பண்ணைத் தபாலாபீசிற் பெறக்கூடியதாக அனுப்புதல்வேண்டும். இருபத்தைந்து ரூபாவுக்குக் குறைந்த ஆடர்கள் எம்மால் வீ பீ. யில் அனுப்பப்படமாட்டா.

சபையார் அச்சிட்ட புத்தகங்களன்றி ஏனைய புத்தகங்கள் இங்கு விலைக்குக் கிடையா.

சபையார் அச்சிட்ட புஸ்தகங்கள் வண்ணார்பண்ணை, S. S. சண்முகம், பிறிற்றூனியா ஸ்ரோர், சரஸ்வதி புத்தக சாலை முதலிய இடங்களிலும், பருத்தித்துறை S. P. சுல்த்தான் சிக்கந்தரிடத்திலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப் பிள்ளை, வி. எம். கந்தசாமி இவர்களிடமும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

---


அநேக பரிசுகள், மெடல்கள், நற்சாட்சிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.

25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியசான்பரன்ஸ் அண்டு மருந்துக்கண்காட்சியில் பஸ்கிளாஸ் (முதல்தர) தேவநாஷதங்களைத்தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும் பெற்ற

உலகம் புகழ்வது,  உள்ள நாளும் மறவாதது.



சூலை, குஷ்டம், ரணம், மேகம் முதலிய சகல வியாதிக்குங் கைகண்டது.

பழனி, சி. எம். சாமி

**குரு தாம்ர பஸ்பம்.**

முப்பூவினால் தளுக்கற நீற்றியது; களிம்பற்றது; வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றுஞ்செய்யாதது; பத்தியமில்லை. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

பலனில்லாவிடில் பணந் திருப்பிக் கொடுக்கப்படும்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். மறுமுறை வியாதி திரும்பி வராது. இது சகல வியாதிகளையும் வேரற நீக்கும் சக்தி வாய்ந்தது.

சூலை, குஷ்டம், திமிர், ரணம், மதமதப்பு, தடிப்புகள், கிரந்திகள், பத்துகள், கைகால் ரணங்கள், குன்மம், மேகம், டவுந்திரம், கண்டமாலை, சூலைநீர் முதலிய சகல சர்மவியாதிகளும் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும்.

குறைநோய் சம்பந்த வியாதிகள், விரல்கள் அழுகிப்போயிருந்தாலும்சரி, அம்மட்டில் ஆறிவிடும். இது குஷ்டம், கருமேகம், வெண்மேகம், செபமேகம் முதலியவைகளுக்கு மகா அருமையானது. இதுபோன்ற மருந்து எங்கும் கிடைப்பதரிது.

80 வேளை மருந்து ரூபா 40. 40 வேளை மருந்து ரூபா 20. 20 வேளை மருந்து ரூபா 10.

ஏழைகளுக்குப் பாதி விலை. பிரபுக்களுக்கு விலை வேறு. வி. பி. சார்ஜ் பிரதியேகம்.

நற்சாட்சி.

தேகமெல்லாமிருந்த மேகப்பத்துகள் இருந்த இடந் தெரியாமல் மறைந்துவிட்டன. கைகால் விரல்களிலிருந்த அருத மேக ரணங்கள் பூரா ஆறிவிட்டன. முகவசீகரமும் பசியும் உண்டாயிருக்கின்றன. K. பழனியாண்டிப்பிள்ளை, செருத்தூர், லால்குடி, திருச்சி.

தங்கள் தாமிரபஸ்பம் 64 வேளை சாப்பிடக் கொடுத்ததில் குஷ்டரோகம் குணமாயிற்று. சரீரத்திலுள்ள மேக நோய்கள் நீங்கி பாதத்தில்மட்டும் கொஞ்சம் இருக்கிறது. முகதேஜஸ் உண்டாயிருக்கிறது. தவிர வேறு ஒருவருக்கு சூலைநோய் (பித்த குன்மம்) 6 வேளையில் குணமாயிற்று. இன்னும் 80 வேளை மருந்து வி. பி. யில் அனுப்பவும்.

சி. பி. நாராயணபிள்ளை, சப் போஸ்மாஸ்டர், சர்ச்சில் ரோட், றங்கூன். 4-11-24.

**நிகரற்ற மன்மத கோலாகல குளிகை.**

அபூர்வ சக்தி வாய்ந்தது! புதியபலத்தைக்காட்டும்! ஒருமுறை பரீட்சிக்கவும்!

ஆச்சரியகுணமுள்ளது! போனபலத்தை மீட்கும்! அதை இன்றே பார்க்கவும்.

இதற்கு நிகரான மருந்து புவியிலெங்குமில்லை. ஒரேகுளிகையில் பரீட்சிக்கலாம். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி முதலியவைகள் நீங்கி நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி உண்டாகும். வீரியக்கட்டும், இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வின் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. பரீட்சைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

120 குளிகை ரூபா 10. 60 குளிகை ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை ரூபா 2. வி. பி. சார்ஜ் வேறு.

திருச்சி கா. இ. மு. இப்ராயிலா 3-1-23-ல் எழுதுகிறார்:

தங்கள் மன்மத கோலாகல குளிகையைச் சாப்பிட்டதில் இரத்தத்தைச் சுத்திசெய்து நரம்புத் தளர்ச்சியை நீக்கி நல்ல பலத்தையும் வீரியத்தையுங் கொடுத்து உற்சாகத்தையும் இன்பத்தையும் தருகிறது. இன்னும் 3 ரூபாய் குளிகை வி. பி. யில் அனுப்பவும்.

சித்த ஆயுள்வேத டாக்டர்,
**C. மலையப்பசாமிப்பிள்ளை,**
நித்தியானந்த மெடிக்கல் ஹால்,
பழனி.

(Q. 64 B)


---


தங்க மலாம் பூசிய
ரிஸ்லெட் கெடியாரம்.



இந்த கெடியாரம் பார்வைக்கு பொன் கெடியாரம் போலவேதோற்றும். வெகு அழகாயும் ஆச்சரியமாயும் இருக்கும். சரியான டைம் காட்டக்கூடியது. வெகு காலம் நன்றாய் போகக்கூடியது.

பொன் கில்ட் ரிஸ்லெட் கெடியாரமும் பொன் கில்ட் ஸ்பிரிங் பட்டையுடன் 6-8 0.

ஸ்ட்ரேட் செடல்மெண்டுக்கும் F. M. S. மலையாஸ்ட்ரேட்டிற்கும் முன்பணமில்லாமல் C. O. D. மூலியமாக அனுப்ப முடியாது.

விலாசம்:—கனக அண்டு கம்பெனி,
(H. 35) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.


---


"ஸ்ராண்டேர்ட்"
**கொழுக்கியோடுகள்:**
**(Standard Tiles)**

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ராண்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றோம்:—

முதலாவது, இந்தஓடுகள் மிகப்பாரங்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள் நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றாவது, இந்த வடஇலங்கையின் தேசசுவாத்தியத்திற்கு இயைந்த ஓடுகள் இவைகளேயாம். இந்த ஓடுகள் உஷ்ணகாலங்களிற் குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற சாலு வருடகாலமாக நாம் தருவித்து விற்றுவருகின்றோம். இந்தநாலு வருடகாலத்தில் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இவை சிறந்ததென்பதற்கு இந்த ஒரு நியாயமுமே போதிய சான்றாகும்.

S. வீரகத்திப்பிள்ளை,
சோல் ஏஜண்டு,
(H. 34.) யாழ்ப்பாணம்


---


**சாலாமிஸ்திரி லேகியம்**

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுக்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருடைத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைருத்தலுக்கு ரூபா க0. கால் ருத்தலுக்கு ரூபா ௫ தாபற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பீ. சட்டம் இல்லாததினு முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டுக்களப்பு,
(M. 36.) சிலோன்.


---

வான்முகில் வழாது பெய்கம்மிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

---

Printed and Published by Pandit V. T. Sambandhan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna,